
# சைவ நீதி

# Saiva Neethi

நற்றுணையாவது நமசிவாயவே



Price
£ 1
€ 1.25
$ 2

## கே.பி வித்யாதரன்

எழுதிய மாத பலன் உள்ளே

# Lycamobile

Call the world for less

# Call Sri Lanka





Landline & Mobile

**5p /min**

when you buy

National Bundle just for £10 /30 Days

**250 UK Minutes**

**UNLIMITED**

Texts | Data | Lyca to Lyca

To buy: dial *139*11044# or text 11044 to 3535

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lycamobile National Bundle ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Unlimited usage is subject to a fair usage of 3000 minutes/texts/MB per month per SIM. Usage in excess of your allowance will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Lycamobile's Special International rates for National Bundle customers offer ("the offer") is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with the £10, £20, £30 or £40 National Bundles (not the £5 bundle). Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), or if it is being used for tethering. Promotional period: the offer is valid from 1st June 2013 until 30th June 2013.

Lyca mobile

Call the world for less

மேன்மைகொள்
# சைவ நீதி

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2044
நந்தன : ஆவணி - புரட்டாசி
மலர் : 1 இதழ் : 5
செப்டம்பர் 2013

பொறுப்பாசிரியர் :
பத்மினி சிவானந்தசோதி

பதிப்பாசிரியர் :
நா. சிவானந்தசோதி

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

| | | |
|---|---|---|
| கணக்கு எண் | : | 29513668 |
| வங்கி இலக்கம் | : | 77 91 29 |
| வங்கி | : | Lloyds TSB |

வடிவமைப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Layout :
Kamala Arts
Email : ambika.siva5@gmail.com

## முதலாம் திருமுறை

### சம்பந்தர் சுவாமிகள் அருளியது

திருப்பிரமபுரம்
(அருள்மிகு சட்டைநாத சுவாமி திருக்கோயில்,
சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம்)

### திருச்சிற்றம்பலம்

முற்றல்ஆமையிள நாகமோடுஏனம்
முளைக்கொம்புஅவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலி தேர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
கற்றல்கேட்டல்உடை யார்பெரியார்கழல்
கையால்தொழுது ஏத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை : ஆமையோடு, நாகம் முதலானவைகளை ஆபரணமாகக் கொண்டு திருஓடு ஏந்தி பிச்சை கொள்ளும் சிவபெருமான், என் உள்ளத்தைக் கவர்ந்தவன். நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்களும், கேள்வி ஞானம் பெற்றவர்களும், திருத்தொண்டு செய்யும் பெருமக்களும் கரங்கூப்பி வணங்கி நிற்க இடபவாகனத்தில் காட்சி தரும் பெருமான் இவனல்லவா ?

---

உங்கள் வீட்டுக்கு சைவ நீதியை வரவழைக்க நீங்கள்
செய்ய வேண்டியது £ 1.50 கான பணத்தை
காசோலை மூலமாக அனுப்பிவைத்தால் புத்தகம்
உங்கள் வீட்டில்





## சைவப்பெருமக்களுக்கு!!!

**சை**வநீதி வாசகர்களுக்கும், சைவசமய மக்களுக்கும் என் ஆதங்கத்தை தெரிவிக்க விரும்புகின்றேன். சைவமக்களின் முக்கியமான விரதங்களில் ''பிரதோஷவிரதம்'' மகிமையானது. சைவத்தமிழ் மக்கள் ஜோதிடத்தில் மிக நம்பிக்கையுடையவர்கள். இவர்கள் தங்கள் கவலைகளுக்கு பரிகாரம் கேட்டால் அவர்கள் ''பிரதோஷவிரதம்'' அநுஷ்டிக்க கூறுவார்கள். அந்த அளவிற்கு மிக முக்கியமானதாகும்.

பிரதோஷ விரதம் மாதத்திற்கு 2 முறை வருகின்றது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள தஞ்சாவூரில் உள்ள ஆலயத்தில் பெரிய நந்தீஸ்வரருக்கு மிகப்பெரிய விழாவாகவே கொண்டாடப்படுகிறது. இம்முறை சைவ நீதியின் அட்டைப்படத்தில் நந்தீஸ்வரப் பெருமானுக்கு பால் அபிஷேகம் நடைபெறுவதை சைவ மக்கள் பார்த்து மகிழலாம்.

இப்படி மகிமையான விரதத்தை இங்கு அநுஷ்டிப்பதற்கு எந்த ஆலயமும் ஒழுங்கு செய்யவில்லை. நந்தியெம்பெருமானின் சக்திக்கு ஏற்றவாறு எந்த ஆலயத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட வில்லை.

சைவ மக்களே பிரதோஷவிரதத்தின் பலாபலன்களை இப்படியொரு நந்திக்கு பால் அபிஷேகம் செய்து வழிபட்டு மேன்மையடைய வேண்டும் என்பதே என் ஆதங்கம். அதற்குரிய சேவையில் சைவ நீதியும் தன் ஆதரவை அளிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.



# சிவன் கோயில்களில் பிரதோஷம் அன்று எப்படி வலம் வந்து வணங்க வேண்டும்!



மாதந்தோறும் இரண்டு முறை பிரதோஷம் வருகிறது. பிரதோஷம் அன்று சிவன் கோயில்களில் எந்தெந்த தெய்வங்களை எப்படி வலம் வந்து வணங்கி பலன் பெறுவது என்பது பற்றி பார்ப்போமே!. சிவன் கோயில்களில் சிவபெருமானுக்கு எதிரே நந்தி பகவானின் பெரிய திருவுருவம் கம்பீரமாக உள்ளது. பிரதோஷ காலங்களில் வழிபடும் பக்தர்கள் நந்தியை வழிபட்டு விரதமிருந்து மாலை பூஜை முடித்த பின் உணவு அருந்துகின்றனர். தியோத திதியில் மாலை 4.30 மணி முதல் இரவு 7 மணி வரை உள்ள காலம் பிரதோஷ காலம் ஆகும். தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலில் உள்ள அமிர்தத்தை பெற வேண்டி வடவரை என்னும் மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் நாகத்தை கயிறாகவும் வைத்து திருப்பாற்கடலை கடைந்தனர். இந்நிகழ்ச்சியை சிலப்பதிகாரமும், ஆய்ச்சியர் குரவை என்ற பகுதியில் வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி பண்டொரு நாள் கடல் வயறு கலக்கினையே என கூறுகிறது.

தேவர்களும், அசுரர்களும் திருபாற்கடலை கடைய துவங்கியதும் வேதனை தாளாத வாசுகி நாகம் விஷத்தை கக்கியதால் வெளியே வந்த ஆலகால விஷம் தேவர்கள், அசுரர்களை நெருங்க அதன் வெப்பம் தாங்காத அனைவரும் சிவபெருமானை தஞ்சம் அடைந்தனர். சிவபெருமான் சக்தியுடன் நந்தி பகவானின் இரண்டு கொண்டுகளில் நடுவே பிரன்னமாகி எங்கும் பரவியிருந்த விஷத்தை உளுந்து அளவாக்கி அனைவரையும் காப்பாற்றுவதற்காக ஆலகால விஷத்தை தான் உண்டார். அதுகண்டு பயந்து நின்ற பார்வதிதேவியும் இறைவனுக்கு விஷத்தால் ஏதும் இன்னல்கள் ஏற்பட்டு விடக்கூடாது என கருதி சிவபெருமானது கண்டத்தில் (கழுத்தில்) தன் கையை வைத்து அவ்விஷத்தை கழுத்திலேயே நிலைத்திருக்க செய்தார். இதனால் ஆலகால விஷம் சிவபெருமானின் கழுத்து பகுதியிலேயே தேங்கி நின்று நீலகண்டம் ஆயிற்று. நஞ்சுண்டு இருந்ததால் நஞ்சுண்டவன் என சிவன் அழைக்கப்படுகிறார். ''பெயர்தக்க நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என வள்ளுவர் குறிப்பிட்டது போல நஞ்சுண்டு உலகத்தை காத்த அந்த நேரத்தை 'பிரதோஷ காலம்' என கூறுகிறோம். அக்காலத்தில் நந்தி பகவானையும், சிவபெருமானையும் தரிசனம் செய்தால் சர்வ பாவமும் விலகும் என்றும், மகப்பேறு உண்டாகும் என்றும் நம்பப்படுகிறது.

பிரதோஷ காலத்தில் சிவபெருமானை வணங்கும் முறையை பற்றி கடண்பவன புராணம் தெரிவிப்பது யாதென்றால், நந்தியை தரிசனம் செய்து அங்கு நின்று இடப்புறமாக சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து சென்ற வழியே திருப்பி வரவேண்டும். நந்தியை மீண்டும் தரிசனம் செய்து அங்கு நின்று வலமாக சென்று கோமுகி எனப்படும் சிவபெருனின் அபிஷேக நீர் வரும் துவாரம் வழியே தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வரவேண்டும். நந்தியை மீண்டும் தரிசனம் செய்து அங்கு நின்று இடப்புறமாக சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வந்து நந்தியை தரிசனம் செய்து வலமாக வரவேண்டும். திரும்பவும் கோமுகியை தரிசனம் செய்து மீண்டும் வந்த வழியே திரும்பி வந்து நந்தியை தரிசனம் செய்து இடப்புறமாக சென்று சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து திரும்பி

வரவேண்டும். நந்தியை தரிசனம் செய்த பின்னரே சிவபெருமானை தரிசனம் செய்ய வேண்டும். இப்படி பரிதட்சணம் செய்து வழிபடுவது 'சோமசூத்திர பிரதட்சணம் என்று கூறப்படுகிறது. சோமசூத்திர பிரதட்சணம் செய்த பின்னர் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு ஆத்ம பிரதட்சணம் செய்ய வேண்டும். இதனால் செய்த பாவங்கள் விலகி நற்பலன்கள் கோடி கிட்டும். •

**நந்தியில் காதில் கோரிக்கை வைக்கலாமா?**

ஆகமங்களில் ஆலய அர்ச்சகரைத் தவிர மற்றவர்கள் ஆலய மூர்த்திகளைத் தொடக் கூடாது என்று விதிக்கப்பட்டுள்ளது. பலர் நந்தி பகவானின் காதுகளில் தங்களின் பிரார்த்தனை களைக் கூறுவதை வழக்கமாக வைத்துள்ளார்கள். எனினும், அவ்வாறு செய்யும்போது தவறுதலாக நாம் நந்தியெம்பெருமானைத் தீண்டுவதாக அமைய நேரியடலாம். அது மட்டுமல்லாமல் நமது காற்று அவரின்மேல் பட்டாலோ, துர்நாற்றம் அவரின்மேல் பட்டாலோ அதனால் நமக்கு தோஷம் ஏற்படும். ஆகவே, இவற்றைத் தவிர்க்க நாம் நந்தியெம்பெருமானின் இடதுபுறம் வடக்கு நோக்கி நின்றுகொண்டு கைகூப்பி மிகுந்த பக்தியுடனும் மரியாதையுடனும் நமது கோரிக்கை களை மனதினால் தெரிவிக்கலாம். கண்டிப்பாக அவை, பரம்பொருளான சிவபெருமானால் அனுக்கிரகிக்கப்படும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

**சிவபெருமானை எட்டு வகையான விரதங்கள் இருந்து வழிபட்டு அவரது பரிபூரண அருளைப்பெறலாம்.**

1. சோமவார விரதம் - திங்கள் கிழமைகளில் இருப்பது.
2. உமா மகேஸ்வர விரதம் - கார்த்திகை பவுர்ணமியில் இருப்பது.
3. திருவாதிரை விரதம் - மார்கழி மாதத்தில் வருவது.
4. சிவராத்திரி விரதம் - மாசி மாதம் அமாவாசை தினத்தில் வருவது.
5. கல்யாண விரதம் - பங்குனி உத்திரத்தன்று கடைபிடிப்பது.
6. பாசுபத விரதம் - தைப்பூச தினத்தில் வருவது.
7. அஷ்டமி விரதம் - வைகாசி மாதத்தில பூர்வபட்ச அஷ்டமி தினத்தில் அனுஷ்டிப்பது.
8. கேதார கவுரி விரதம் - ஐப்பசி அமாவாசையை ஒட்டி (தீபாவளி தினத்தில்) இருக்கும் விரதம்

## சிவபெருமானை வழிபட்டு உய்வு பெற்ற உயிர்கள்

**சக்தி, பெருமால், பிரம்மா, இந்திரன், தேவர்கள் என சிவபெருமானை வழிபட்டு பேரு பெற்றதைப் போல பூமியில் உள்ள உயிர்களும் உய்வு பெற்றுள்ளன. கீழே உயர்களின் பெயர்களும், வழிபட்ட தலங்களும்.**

| | |
|---|---|
| சிங்கம் | திருநல்லூர் |
| யானை | திருக்குற்றாலம், மதுரை, காளையார் கோவில், திருவானைக்காவல், திருக்காளத்தி |
| காளை | திருவையாறு |
| பசு | ஆவூர், செய்யாறு, ஆவடுதுறை கரூர், பட்டீஸ்வரம் |
| குதிரை | சீயாத்தமங்கை |
| ஆடு | திருவாடானை |
| பன்றி | சிவபுரம் |
| கழுதை | கரவீரம் |
| குரங்கு, அணில், காகம் | குரங்கணில் முட்டம் |
| முயல் | திருப்பாதிரிப் புலியூர் |
| நாரை | நாரையூர், மதுரை |
| கரிக்குருவி | மதுரை, வலிவலம் |
| மயில் | மயிலாடுதுறை, மயிலாப்பூர் |
| கருடன் | வைத்தீஸ்வரன், சிறுகுடி |
| நண்டு | திருந்துதேவன்குடி, திருநீடூர் |
| வண்டு | திருசைலம், திருண்டுறை, வாழ்கொளிபுத்தூர் |
| தேனீ | நன்னிலம் |
| ஆமை | திருமணஞ்சேரி |
| எறும்பு | திருவெறும்பூர் |
| பாம்பு | காளத்தி, திருப்பாம்புரம், குடந்தைக் கீழ்க்கோட்டம் |
| சிலந்தி | ஆனைக்கா |
| எலி | திருமறைக்காடு |
| ஈ | திருஈங்கோய் மலை |

# சிவன் கோயில்களில் எவ்வாறு வழிபட வேண்டும்?



சிவன் கோயிலில் நுழைந்தவுடன் நமது கண்களில் பிரமாண்டமாக தெரியும் கோபுரம் ராஜகோபுரம் எனப்படும். அதனைத் தெய்வ வடிவமாக எண்ணி வணங்கி விட்டுத்தான் கோயிலுள் நுழைய வேண்டும். கோயிலுக்கு வரமுடியாதவர்கள் கூட தூரத்தில் இருந்தபடியே கோபுர தரிசனம் செய்வது இறைவனை வணங்குவதற்கு சமமாகும். எனவே தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்கிறார்கள். கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் தெரிவது பலிபீடம் ஆகும். அதனருகில் சென்று கீழே விழுந்து நமது உடலில் உள்ள காமம், கோபம், பேராசை, பற்று, அகங்காரம் ஆகியவற்றை அந்த இடத்தில் பலி கொடுத்து விட்டு இறைவனை வணங்க செல்ல வேண்டும் என்பதற்காகவே இந்த பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்து இருப்பது துவஜஸ்தம்பம் அல்லது கொடிக்கம்பமாகும். இந்த கொடிக்கம்பத்தில் தான் கோயிலின் திருவிழாக்காலங்களில் கொடியேற்றி அதை ஊர் முழுவதும் தெரிவிப்பார்கள். அதற்கு அடுத்து சிவனின் வாகனமான நந்தியின் மண்டபம் அமைந்துள்ளது. இவரை வணங்கி அனுமதி பெற்ற பின்பே சிவனை வணங்க செல்ல வேண்டும். சன்னதியில் முதலில் அருள்பாலிக்கும் முழு முதற்கடவுளான விநாயகரை வணங்கி, அவருக்கு முன் தோப்புக்கரணம் போட வேண்டும். அடுத்து மூலஸ்தானத்தில் உள்ள சிவபெருமானை ஒரே சிந்தனையுடன் வணங்க வேண்டும். பின் பிரகாரத்தில் உள்ள சுப்ரமண்யர், அம்பிகை, துர்க்கை, தட்சிணாமூர்த்தி, பைரவர் ஆகியோரை வழிபட வேண்டும்.

கடைசியாக இறைவனை தரிசிக்க வரும் பக்தர்களின் கோரிக்கையை கணக்கெடுக்கும் சண்டிகேசுவரருக்கு முன் நின்று ''வந்தேன் வந்தேன் வந்தேன், இறைவனின் தரிசனம் கண்டேன், கண்டேன், கண்டேன் என மெதுவாக கூறி, இரு கைகளையும் மெதுவாக தட்டி, நன்றி சொல்லி வெளியே வர வேண்டும். கோயிலை விட்டு வெளியே வரும் போது சிறிது நேரம் உட்கார்ந்து, இறைவா! நான் எனது பிரார்த்தனையை உன்னிடம் கூறிவிட்டேன், இதில் எனக்கு எது தேவை, எது தேவையில்லை என்பது உனக்கு தெரியும். அதன்படி வரம் கொடு என பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். பின் மறுபடியும் கொடிக்கம்பத்திற்கு அருகில் சென்று வடக்கு நோக்கி தலை வைத்து, பெண்களாக இருந்தால் இரண்டு கை, இரண்டு கால், தலை ஆகிய ஐந்து உறுப்புகள் தரையில் படுமபடியான பஞ்சாங்க நமஸ்காரமும், ஆண்களாக இருந்தால் உடல் முழுவதும் தரையில் படும் படியான சாஷ்டாங்க நமஸ்காரமும் செய்துவிட்டு வெளியில் வரவேண்டும். கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் இறைவனை வழிபட்டால் மட்டும் போதாது. அவனுக்கு பிடித்த மாதிரியும் நடந்து கொள்ள வேண்டும். கோயிலில் தரும் எந்த பிரசாதத்தையும் கண்ட இடங்களில் போடாமல் அதற்கென வைக்கப்பட்டுள்ள இடங்களில் போட வேண்டும். கோயிலில் உள்ள தெய்வங்கள் அனைத்தும் எப்போதும் தியானத்தில் இருப்பதால் தொட்டு வணங்குதல் கூடாது. கோயிலில் இறை சம்பந்தப்பட்ட விஷயங்களை தவிர வேறெதும் பேசுதல் கூடாது. இறைவன் எளிமையையே விரும்புவான். அவனை தரிசிக்க செல்லும் போது ஆடம்பரமான உடைகள், நகைகள், மொபைல் உபயோகிப்பது ஆகியவற்றை தவிர்ப்பது நல்லது. •

## சிவனே என்றிரு என்பதன் பொருள் தெரியுமா?

சிவனேனு இரு என்று பலரும் சொல்ல கேட்டிருப்போம், அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா?.. சிந்தனையை ஒருமுகப்படுத்தி இறைநினைப்பில் இருக்க வேண்டும் என்பதையே சிவனே என்றிரு என்று பெரியவர்கள் குறிப்பிட்டனர். திருமந்திரத்தில் திருமூலர், சிவ சிவ என்றிட தீவினை மாளும் என்கிறார். அவ்வையார், சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை என்று குறிப்பிடுகிறார்.

# பஞ்சபூத சிவதலங்கள்

இந்த உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து சிவசக்திகளால் ஆனது. இந்த ஐந்து சக்திகளுக்கு உலகை ஆக்கும் வல்லமையும், காக்கும் வல்லமையும், அழிக்கும் வல்லமையும் உண்டு. இந்த சிவசக்திகளை சமஸ்கிருத மொழியில் பிருதிவி(நிலம்), அப்பு(நீர்), தேயு(நெருப்பு), வாயு(வளி), ஆகாசம்(வான்) என அழைக்கின்றார்கள். இவற்றின் வல்லமையை கருத்தில் கொண்டு ஐம்பெரும்சக்திகள் என்று தமிழில் அழைப்பதைப் போல சமஸ்கிருதத்தில் பஞ்சபூதங்கள் என்று வழங்குகிறார்கள். இறைவனான சிவபெருமான் பஞ்ச பூதங்களாக அருள்புரியும் தென் இந்தியாவின் ஐந்து கோவில்கள் பஞ்சபூத சிவதலங்களாகும்.

## 1) பிருத்விதலம்

தமிழ்நாட்டில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள தியாகராஜர் அல்லியங்கோதை திருக்கோயில் பிருத்விதலமாகும். சுந்தர மூர்த்தி நாயனார் நட்பு கொண்டவர், அப்பர் சுவாமிகளால் பாடல்பெற்றவர் தியாகராஜர். பிருத்வி என்றால் மண்ணாகும். இங்குள்ள இறைவனை பிருத்விலிங்கம் என்றும், புற்றுமண்ணால் ஆன லிங்கரூபாக இறைவன் இருக்கிறார் என்பதால் புற்றிடங் கொண்ட நாதர் என்று வழங்கப்படுகிறார்.

## 2) அப்புதலம்

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஜம்புலிங்கேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் அப்புதலமாகும். இத்திருக்கோயில் திருவானைக்காவல் என்றும் அழைக்கப்பெறுகிறது. அப்பு என்றால் நீராகும். உமையம்மை ஈசனை வணங்க நீரைக் கொண்டு லிங்கம் செய்தார். இந்த லிங்கம் அப்புலிங்கம் என்று அழைக்கப்படுகிறது. இறைவன் நீர்வடிவான அப்புலிங்கமாக தோன்றி அருள் செய்த தலம் இது.

## 3) தேயுதலம்

தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அருணாசலேஸ்வரர் உண்ணாமுலையம்மை திருக்கோயில் தேயுதலமாகும். தேயு என்றால் நெருப்பாகும். பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் இடையே யார் பெரியவன் என்று போர் நிகழ்ந்த போது, அடிமுடி காணமுடியாத நெருப்பாக உயர்ந்து தானே பெரியவன் என்று சிவபெருமான் உணர்த்தினார். பிரம்மாவிற்கும், விஷ்ணுவிற்கும் இறைவன் நெருப்பாக தோன்றி அருள் செய்த தலம் இது.

## 4) வாயுதலம்

ஆந்திராவில் சித்தூர் மாவட்டத்தில் உள்ள காளஹஸ்தீஸ்வரர் ஞானப்பூங்கோதை திருக்கோயில் வாயுதலமாகும். சிலந்தி, பாம்பு, யானை என உயிர்கள் வழிபட்டு சிவபெருமானை அடைந்த தலம். இந்த உயிர்களின் பெயரான ஸ்ரீ (சிலந்தி), காள (பாம்பு), ஹஸ்தி (யானை) என்று அழைப்படுகிறார். இறைவன் வாயுலிங்கமாக காட்சி தரும் தலம் இது.

## 5) ஆகாசதலம்

தமிழ்நாட்டில் சிதம்பரம் மாவட்டத்தில் உள்ள நடராசர் சிவகாமியம்மை திருக்கோயில் ஆகாசதலமாகும். நடராஜர் கோலத்தில் உலகில் ஐந்தொழில் செய்யும் திருக்கோலத்தில் சிவபெருமான் இருக்கிறார். மாணிக்கவாசரின் பாடலை எழுதி சிற்றம்பலத்தான் என இறைவனே கையெழுத்து இட்டு அருள் செய்த தலம். சித் என்றால் அறிவு, அம்பரம் என்று வெளி. நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் ஆகாயமாக அருள் தரும் தலம் இது.

### சன்னதியை மறைத்து நிற்கக்கூடாது என்பது ஏன்?

ஆலய ஆகம விதிப்படி கர்ப்ப கிரகத்தினுள் இருக்கும் மூலவருக்கும் எதிரில் நந்தி இருக்கும் இடத்திற்கும் இடையில் நின்று வணங்கக்கூடாது. ஆலய சாஸ்திரப்படி மூலவருக்கு முன்னால் உள்ள நந்தியின் மூக்கிலிருந்து விடும் மூச்சுக் காற்றினால்தான், கர்ப்பகிரகத்தில் உள்ள மூலவருக்கு உயர்நிலை கிடைக்கும் என்பது நம்பிக்கை. மூலவரின் வயிற்றுப்பகுதியில் உள்ள தொப்புள் பாகத்தை உயர்நிலையாகக் கொண்டு, அந்த இட மட்டத்தின் நேராக நந்தியின் மூக்கு அமையுமாறு கோயில்களில் நந்தி அமைக்கப்படுகிறது. இம்மூச்சுக்காற்று தடைபடாமல் செல்வதற்காகவே குறுக்கே போவது கூடாது என்கின்றனர். சன்னதியைவிட்டு அகன்று நின்று வழிபட வேண்டும் என்று சொல்வதும் இதன் விளைவாக வந்தது தான்.

# ஆவணி மாத ராசிப் பலன்கள்

(ஆவணி 15 - புரட்டாசி 15)

## மேஷம்



பேச்சை விட செயல் வேகம் அதிகம் உள்ளவர்களே! உங்களின் பூர்வ புண்யாதிபதியான சூரியன் 5ல் அமர்ந்து ஆட்சிப் பெற்று அமர்ந்திருப்பதால் பிள்ளைகளின் பிடிவாதம் நீங்கும். குழந்தை பாக்யம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். பூர்வீக சொத்தைப் பெறுவதில் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். வழக்குகள் சாதகமாகும். சொந்த ஊரில் செல்வாக்குக் கூடும். விலகியிருந்த பழைய சொந்த பந்தங்கள் தேடி வந்துப் பேசுவார்கள். உங்கள் ராசிக்குள்ளேயே கேது அமர்ந்திருப்பதால் அவ்வப்போது முன்கோபம் வரும். ஆரோக்யத்தில் அக்கறைக் காட்டுங்கள். லேசாக தலைச்சுற்றல் வரும். சுக்ரன் 6ந் தேதி வரை 6ம் வீட்டில் மறைந்து நிற்பதால் கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வாகன விபத்துகள் வரக்கூடும். மனைவிக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வரக்கூடும். 7ந் தேதி முதல் சுக்ரன் 7ம் வீட்டில் ஆட்சிப் பெற்று அமர்வதால் கணவன் மனைவியுடன் இருந்த கசப்புணர்வுகள் நீங்கி அன்யோன்யம் அதிகரிக்கும். செவ்வாய் 19ந் தேதி முதல் 4ல் கேந்திர பலம் பெற்று அமர்வது உங்களுக்கு மனோ பலத்தை அதிகமாக்கும். வி.ஐ.பிகள் அறிமுகமும் கிடைக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். ஆனால் செவ்வாய் நீசமாகி அமர்வதால் சோர்வு, களைப்பு வந்து நீங்கும். தூக்கம் குறையும். இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறையக் கூடும். எனவே இரும்புச் சத்துள்ள காய், கனிகளை உட்கொள்வது நல்லது. சகோதர வகையிலும் கொஞ்சம் அலைச்சல் இருக்கும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் உண்டு. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். உத்யோகத்தில் சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும். வேலைச்சுமையும் அதிகரிக்கும். மாறுபட்ட அணுகுமுறையாலும், யதார்த்தமான பேச்சாலும் இழந்ததை எட்டிப்பிடிக்கும் மாதமிது.

## ரிஷபம்

கடின உழைப்பால் இலக்கை எட்டிப் பிடிப்பவர்களே! உங்களுடைய ராசிக்கு 6ம் வீட்டில் சனியும், ராகுவும் அமர்ந்திருப்பதால் அதிரடி முன்னேற்றங்கள் உண்டு. தடைப்பட்ட விஷயங்களெல்லாம் உடனடியாக முடிவடையும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. வெளிமாநிலத்தவர்கள், வேற்றுநாட்டிலிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். தந்தைவழி சொத்துக்களைப் பெறுவதில் இருந்து வந்த தடைகள் நீங்கும். சூழ்ச்சியாலும், பிரச்னையாலும் வேலையை இழந்தவர்களுக்கு இந்த மாதத்தில் நல்ல நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலும் வேலைக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. உறவினர், நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். உங்களின் ராசிநாதனான சுக்ரன் தொடர்ந்து பலவீனமாகக் காணப்படுவதால் ஆரோக்யத்தில் அக்கறைக் காட்டுங்கள். சளித் தொந்தரவு, தொண்டை வலி, ஜனன உறுப்புகளில் இன்பெக்ஷன் போன்றவை ஏற்படக்கூடும். வாகனமும் அடிக்கடி பழுதாகும். வீடு பராமரிப்புச் செலவுகளும் அதிகரிக்கும். மனைவிக்கும் அலைச்சல் அதிகமாகும். அவருடன் சின்ன சின்ன கருத்து மோதல்கள் வரும். மனைவிவழி உறவினர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உங்களின் யோகாதிபதிகளான சூரியனும், புதனும் இந்த மாதம் முழுக்க வலுவாக இருப்பதால் எத்தனைப் பிரச்னைகள் வந்தாலும் அதை எதிர்கொள்ளும் சக்தி கிடைக்கும். ஷேர் மூலம் பணம் வரும். திடீர் பணவரவு உண்டு. தாயாரின் உடல் நிலை சீராகும். விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள், ரத்தினங்களும் வாங்கும் யோகம் உண்டாகும். பழைய காலி மனையை விற்று உங்கள் ரசனைக்கேற்ப வீடு வாங்குவீர்கள். சிலர் கிரகப்பிரவேசமும் செய்வீர்கள். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கிருந்து வந்த கூடாப்பழக்க வழக்கங்கள் நீங்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்யோகத்தில் அதிரடி முன்னேற்றம் உண்டு. மூத்த அதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். நீண்ட கால ஆசைகள் நிறைவேறும் மாதமிது.



## மிதுனம்




முற்போக்கு சிந்தனை வாதிகளே! செவ்வாய் 19ந் தேதி முதல் உங்கள் ராசியை விட்டு விலகி 2ம் வீட்டில் அமர்வதால் கொஞ்சம் நிம்மதி உண்டாகும். குடும்பத்தில் விவாதங்கள் குறையும். வெளிவட்டாரத்தில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். பெரிய நோய்கள் இருப்பதை போன்ற குழப்பத்தில் தவித்தீர்களே! அவை நீங்கும். எதிர்மறை எண்ணங்கள் விலகும். ஆனாலும் ராசிக்குள்ளேயே குரு நிற்பதால் அவ்வப்போது அலுத்துக் கொள்வீர்கள். கொஞ்சம் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிந்து ஆதங்கப்படுவீர்கள். நாம் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டுமோ! யதார்த்தமாக பேசுவது, பழகுவதெல்லாம் தவறுதானோ என்றெல்லாம் கேள்வி கேட்டுக் கொள்வீர்கள். உங்கள் ராசிநாதனான புதன் வலுவான வீடுகளில் செல்வதால் தெள்ளத் தெளிவாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். காரியத் தடைகள் நீங்கும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். ஆழ்மனதிலிருந்து வந்து தாழ்வுமனப்பான்மையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீள்வீர்கள். 3ம் வீட்டில் சூரியன் வலுவாக இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஷேர் மூலமாகவும் பணம் வரும். பெற்றோருடன் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். இளைய சகோதரங்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. வழக்குகளில் வெற்றி உண்டு. சுக்ரன் 6ந் தேதி வரை பலவீனமாக நீச்சமாகி காணப்படுவதால் பிள்ளைகளால் அலைச்சல், அவர்களின் உயர்கல்வி, திருமணம் குறித்து சின்ன சின்ன கவலைகள் வந்து நீங்கும். 7ந் தேதி முதல் சுக்ரன் ஆட்சிப் பெற்று அமர்வதால் மகனுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். வீடு கட்டுவதற்கு சி.எம்.டி., எம்.எம்.டி.ஏ அப்ரூவல் வந்து சேரும். வியாபாரத்தில் ஏற்கனவே செய்துக் கொண்டிருந்த தொழிலை விட்டு விட்டு புது தொழில் தொடங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கடையை மாற்றுவீர்கள். உத்யோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வேலைச்சுமையும், அலைச்சலும் கொஞ்சம் குறையும். அதிரடி முடிவுகளால் முன்னேறும் மாதமிது.

## கடகம்



பழைய சம்பவங்களை மறக்காதவர்களே! கடந்த ஒரு மாத காலமாக உங்கள் ராசிக்குள்ளேயே உட்கார்ந்துக் கொண்டு உங்களைப் பாடாய்படுத்திய சூரியன் இப்போது ராசியை விட்டு விலகி தனஸ்தானத்தில் ஆட்சிப் பெற்று அமர்ந்திருப்பதால் பணத்தட்டுப்பாடு ஓரளவு குறையும். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். கைமாற்றாக உறவினர்களிடம் வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். நெருடலான, தர்ம சங்கடமான சூழ்நிலைகளெல்லாம் இனி நீங்கும். கணவன் மனைவிக்குள் நிலவி வந்த பனிப்போர் விலகும். மனைவிவழியில் உதவிகள் கிடைக்கும். கண், காது, மூக்கிலிருந்த பிரச்னைகள் தீரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி கிடைக்கும். புதனும், சுக்ரனும் சாதகமான வீடுகளில் செல்வதால் நட்பு வட்டம் விரியும். பிரபலங்கள் நண்பர்களாவார்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். புகழ், கௌரவம் உயரும். தொலைக் காட்சி, பத்திரிக்கை களிலும் உங்களுடைய படைப்புகள் இடம் பெறும். உங்கள் ராசிக்கு 12ம் வீட்டில் மறைந்திருந்த செவ்வாய் 19ந் தேதி முதல் ராசியில் அமர்வ தால் அலைச்சல் குறையும். வீண் விரையங்கள் நீங்கும். சகோதர வகையில் இருந்து வந்த பிணக்குகள் நீங்கும். மனைவிக்கு ஏற்பட்ட கர்ப்பச் சிதைவு நீங்கும். குழந்தை தங்கும். 12ம் வீட்டிலேயே குரு மறைந்துக் கிடப்பதால் பிள்ளைகளின் உயர்கல்விக்காக அதிகம் செலவு செய்ய வேண்டி வரும். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். வி.ஐ.பிகளுடன் கவனமாகப் பழகுங்கள். வரம்பு மீறிப் பேச வேண்டாம். வியாபாரத்தில் இந்த மாதம் லாபம் அதிகரிக்கும். பழைய வாடிக்கையாளர்களும் தேடி வருவார்கள். பாக்கிகளை வசூலிப்பதில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோக ஸ்தானத்தில் கேது அமர்ந்து உத்யோக ஸ்தானத்தை சனியும் பார்த்துக் கொண்டிருப்பதால் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால் வெற்றி பெறும் மாதமிது.

## சிம்மம்



வெளுத்ததெல்லாம் பாலாக நினைப்பவர்களே! ராஜ கிரகங்களான சனியும், குருவும் உங்களுக்கு சாதகமாக இருப்பதால் சாதித்துக் காட்டுவீர்கள். பழைய பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வு கிடைக்கும். தடைபட்ட காரியங்கள் முடிவடையும். எதிர்ப்புகள் விலகும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்கள் வீட்டு விசேஷங்களில் கலந்துக் கொள்ளுமளவிற்கு முன்னேறுவீர்கள். வருமானமும் கணிசமாக உயரும். வசதி, வாய்ப்புகள் கூடும். இந்த மாதம் முழுக்க உங்கள் ராசிநாதன் சூரியன் ஆட்சிப் பெற்று அமர்ந்திருப்பதால் எளிதாக எதிலும் வெற்றி பெறுவீர்கள். ஆரோக்யம், அழகு கூடும். வெளிவட்டாரத்தில் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. கணவன்&மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். கோபங்கள் குறையும். புதனும், சுக்ரனும் சாதகமான வீடுகளில் செல்வதால் நண்பர்கள் மதிப்பார்கள். உறவினர்களும் உங்களிடம் ஆலோசனைக் கேட்பார்கள். வாகனம் வாங்குவீர்கள். உங்கள் ரசனைக் கேற்ப புது வீடு, மனை அமையும். ஆனால் 19ந் தேதி முதல் உங்கள் பிரபல யோகாதிபதியான செவ்வாய் 12ம் வீட்டில் நீச்சம் பெற்று அமர்வதால் எதிர்பாராத செலவுகளாலும், திடீர் பயணங்களாலும் பணப்பற்றாக்குறை ஏற்படும். சகோதரங்கள் தன்னை இன்னும் சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லையே என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். உறவினர்களில் ஒருசிலர் உங்களிடம் நயவஞ்சகமாகப் பேசுவார்கள், பழகுவார்கள். கவனமாக இருங்கள். மற்றவர்களைப் பற்றி குறைத்துப் பேச வேண்டாம். சொத்துப் பிரச்னையையும் சுமூகமாக கையாளுங்கள். அவசரப்பட்டு நீதிமன்றம் செல்ல வேண்டாம். ஷேர் மூலமாக பணம் வரும். வியாபாரத்தில் தைரியமாக முதலீடு செய்யலாம். கடையை மாற்றுவது, விரிவுப் படுத்துவது உங்கள் ஆசைப்படி நிறைவேறும். உத்யோகத்தில் செல்வாக்குக் கூடும். உங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் திருப்பங்களும், யோகங்களும் தரும் மாதமிது.

## கன்னி

பாகுப்பாடு பார்க்காமல் பழகுபவர்களே! உங்கள் ராசிக்கு சாதகமான வீடுகளில் சுக்ரன் செல்வதால் நெருக்கடிகளை சமாளிக்கும் சக்தி கிடைக்கும். 19ந் தேதி முதல் செவ்வாய் லாப வீட்டில் அமர்வதால் சவாலான காரியங்களைக் கூட எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். ராஜ தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். சகோதர வகையில் இருந்த மோதல்கள் நீங்கும். உறவினர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனை பைசல் செய்வீர்கள். குறைந்த வட்டிக்கு உங்களுக்கு பண உதவி கிடைக்கும். புறநகரிலாவது ஏதேனும் ப்ளாட் வாங்கி விட வேண்டுமென்று யோசிப்பீர்கள். நல்ல விதத்தில் அமையும். சூரியன் 12ம் வீட்டில் நுழைந்திருப்பதால் தவிர்க்க முடியாத அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகிக் கொண்டேப் போகும். அரசு அதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள். வேற்றுமொழிக்காரர்களும் உதவுவார்கள். தள்ளிப் போய் கொண்டிருந்த கிரகப்பிரவேசம் கோலாகலமாக முடியும். உங்கள் ராசிநாதன் புதன் 1ந் தேதி வரை 12ல் மறைந்துக் கிடப்பதால் வேலைச்சுமை இருக்கும். கொஞ்சம் அலைச்சலும் கூடிக் கொண்டேப் போகும். 2ந் தேதி முதல் புதன் ராசிக்குள் ஆட்சிப் பெற்று அமர்வதால் நிம்மதிக் கூடும். காது, தொண்டை வலி குறையும். சொன்ன சொல்லையும் நிறைவேற்றுவீர்கள். ஏழரைச் சனியில் இறுதிப் பகுதியான பாதச் சனி நடைபெறுவதால் சாலைகளை கடக்கும் போதும், வாகனத்தை இயக்கும் போதும் அலைப்பேசியில் பேச வேண்டாம். மற்றவர்களிடம் யதார்த்தமாகப் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். இடம், பொருள், ஏவல் அறிந்து பேசுவது நல்லது. மாதத்தின் மையப் பகுதியிலிருந்து வியாபாரம் சூடுபிடிக்கும். லாபம் ரெட்டிப்பாகும். புது வாடிக்கையாளர்கள் அதிகம் வருவார்கள். உத்யோகத்தில் நேரம், காலம் பார்க்காமல் வேலைப் பார்க்க வேண்டி வரும். 10ல் குரு அமர்ந்திருப்பதால் கடினமாக உழைத்தும் அங்கீகாரம் கிடைக்கவில்லையென அடிக்கடி ஆதங்கப்படுவீர்கள். சவால்களில் வெற்றி பெறும் மாதமிது.



## துலாம்



நெருக்கடி நேரத்திலும் சிரிப்பவர்களே! உங்களுடைய ராசிநாதன் சுக்ரன் 6ந் தேதி வரை 12ம் வீட்டில் மறைந்திருப்பதால் தவிர்க்க முடியாத செலவுகளும், தர்ம சங்கடமான சூழ்நிலைகளும் வந்துப் போகும். தூக்கம் குறையும். சில காரியங்களை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் ஆடம்பரமாகப் பேசுபவர்கள் யார், உண்மையான அன்புடன் பழகுபவர்கள் யார், உங்கள் மீது நிஜமான அக்கரை உள்ளவர்கள் யார் என்பதனைப் புரிந்துக் கொள்வீர்கள். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். அந்நிய நாடும் சென்று வருவீர்கள். 7ந் தேதி முதல் ராசிநாதன் சுக்ரன் உங்கள் ராசிக்குள் ஆட்சிப் பெற்று அமர்வதால் அழகு, இளமைக் கூடும். பழுதான வாகனத்தை சரி செய்வீர்கள். உங்களின் பாக்யாதிபதியான புதன் சாதகமாக இருப்பதா கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தந்தைவழியில் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் புகழ், கௌரவம் கூடும். 9ம் வீட்டிலேயே கடந்த ஒன்றரை மாதங்களாக உட்கார்ந்துக் கொண்டு சேமிப்புகளைக் கரைத்த செவ்வாய் 19ந் தேதி முதல் 10ல் நுழைவதால் செல்வம் சேரும். மனைவிவழியில் நன்மை உண்டு. மனைவிவழி உறவினர்களும் ஆதரவாக இருப்பார்கள். எதிர்பார்த்த விலைக்கு உங்கள் வீட்டு, மனையை விற்று விட்டு வேறு இடத்தில் வீடு அல்லது மனை வாங்கும் அமைப்பு உருவாகும். மனைவிக்கு இருந்த மாதவிடாய் கோளாறு நீங்கும். சகோதரங்கள் பக்கபலமாக இருப்பார்கள். சூரியன் லாப வீட்டில் ஆட்சிப் பெற்று அமர்ந்திருப்பதால் ஷேர் மூலம் பணம் வரும். அரசால் ஆதாயம் உண்டு. தள்ளிப் போன வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பழைய எதிரிகள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். புது முதலீடு செய்வீர்கள். சந்தை நிலவரத்தை அறிந்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் அதிகாரிகள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். புது சலுகைகளும் கிடைக்கும். சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள். தொலைநோக்குச் சிந்தனையாலும், புதிய அணுகுமுறையாலும் சாதிக்கும் மாதமிது.

## விருச்சிகம்



தவறுகளை தட்டிக் கேட்பவர்களே! உங்களின் பிரபல யோகாதிபதியான சூரியன் 10ம் வீட்டில் ஆட்சிப் பெற்று அமர்ந்திருப்பதால் அரசால் அனுகூலம் உண்டு. வேலைத் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு வேலை அமையும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். தந்தைவழி சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாகும். தந்தைவழி சொத்துகளைப் பெறுவதில் இருந்து வந்த சிக்கல்கள், பிரச்னைகள் தீரும். அக்கம் பக்கம் வீட்டாருடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் விலகும். புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் நட்பு வட்டம் விரிவடையும். உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நீங்கும். சுக்ரன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டு. மனக்கசப்புகள் நீங்கும். வீண் விவாதங்கள் குறையும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வீடு கட்டுவதற்கு ப்ளான் அப்ரூவலாகி வரும். வங்கிக் கடன் உதவியும் கிடைக்கும். ஆனால் ஏழரைச் சனி தொடர்வதால் எந்த வேலையைத் தொட்டாலும் தாமதமாகித் தான் முடிவடையும். கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகம் வேண்டாம். எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் இருவரும் கலந்துப் பேசி முடிவுகள் எடுப்பது நல்லது. ஈகோ பிரச்னைகளை தவிர்க்கப்பாருங்கள். உங்களின் தன பூர்வ புண்யாதிபதி குருபகவான் 8ல் மறைந்திருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை இருந்துக் கொண்டேயிருக்கும். திடீர் பயணங்களும், செலவுகளும் இருக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வியாபாரம் தழைக்கும். பற்று வரவு உயரும். புதிதாக முதலீடு செய்வீர்கள். உத்யோகத்தில் மதிப்பு, மரியாதைக் கூடும். தடைப்பட்ட சம்பள உயர்வு, பதவி உயர்வை எதிர்பார்க்கலாம். இடமாற்றம் கிடைக்கும். சூரியன் வலுவாக இருப்பதால் மூத்த அதிகாரிகள் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். ஆளுமைத் திறனும், அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடி வரும் மாதமிது.

## தனுசு



முயற்சிகளிலிருந்து பின் வாங்காதவர்களே! உங்கள் ராசிநாதன் குருபகவான் வலுவாக அமர்ந்திருப்பதாலும் உங்கள் ராசியை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டிருப்பதாலும் அழகு, இளமைக் கூடும். எதிர்பார்த்திருந்த பணமும் கைக்கு வரும். உங்களின் நிர்வாகத் திறனும் கூடும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும். வீடு வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். வீடு மாற வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆனால் உங்களின் பூர்வ புண்யாதிபதியான செவ்வாய் 19ந் தேதி முதல் 8ல் சென்று மறைவதால் பிள்ளைகளால் அலைச்சல், செலவினங்கள் உண்டாகும். உயர்கல்வி, உத்யோகத்தின் பொருட்டு பிள்ளைகள் உங்களை விட்டு பிரிய வாய்ப்பிருக்கிறது. சகோதரங்கள் அதிருப்தி அடைவார்கள். நண்பர்கள், உறவினர்கள் உதவி கேட்டுத் தொந்தரவு தருவார்கள். உங்களால் இயன்ற உதவியை செய்வதுவிடுவது நல்லது. இயலாது என்றால் நேரடியாகவே சொல்வது நல்லது. வாகனத்தை இயக்குவதற்கு முன்பாக பிரேக், எரிபொருள் எல்லாம் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள். சூரியன் இப்போது 9ம் வீட்டில் ஆட்சிப் பெற்று அமர்ந்திருப்பதால் மகிழ்ச்சி, பணவரவு உண்டு. தந்தையார் உறுதுணையாக இருப்பார். சொத்து வாங்கும் அமைப்பு உண்டாகும். தந்தைவழி உறவினர்கள் வீட்டு திருமணம், கிரகப் பிரவேசம் போன்ற நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். புதனும், சுக்ரனும் சாதகமான வீடுகளில் செல்வதால் மனைவி ஆதரவாகப் பேசுவார். உங்களின் புது திட்டங்களுக்கு பக்கபலமாக இருப்பார். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். 8ல் செவ்வாய் மறைந்திருப்பதால் புதியவர்களை நம்பி கடன் தர வேண்டாம். உத்யோகத்தில் மூத்த அதிகாரிகள் உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும் மாதமிது.

## மகரம்

நியாயம், தர்மம் பார்ப்பவர்களே! உங்களின் பிரபல யோகாதிபதிகளான சுக்ரனும், புதனும் மாதத்தின் பிற்பகுதியில் வலுவடைவதால் முற்பகுதி போராட்டமாக இருக்கும். 19ந் தேதி முதல் செவ்வாயும் 7ல் அமர்வதால் மனைவிக்கு மாதவிடாய்க் கோளாறு, மன இறுக்கம் வந்து நீங்கும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். சகோதரரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். சொத்து வாங்கும் போது தாய்ப்பத்திரத்தைச் சரி பார்த்துக் கொள்ளுங்கள். தாயாரின் உடல் நலம் பாதிக்கும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். 8ல் சூரியன் அமர்ந்திருப்பதால் வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். நீண்ட நாளாக செல்ல வேண்டுமென்று நினைத்திருந்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். 2ந் தேதி முதல் புதன் 9ல் உச்சம் பெற்று அமர்வதால் பணவரவு அதிகரிக்கும். நண்பர்களுடன் இருந்த மனக்கசப்பு நீங்கும். பிதுர்வழி சொத்துப் பிரச்னை தீரும். தெலுங்கு, மலையாளம் பேசுபவர்கள் உதவுவார்கள். 7ந் தேதி முதல் சுக்ரன் 10ல் ஆட்சி அமர்வதால் புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். பிள்ளைகளின் பிடிவாத குணம் தளரும். ஷேர் மூலம் பணம் வரும். தடைப்பட்டிருந்த வீடு கட்டும் பணி தொடரும். உங்கள் ராசிநாதன் சனி ராகுவுடன் தொடர்வதால் வேலைச்சுமை அதிகமாகும்.



சோர்வு, களைப்பு நீங்கும். யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்ய வேண்டாம். மற்றவர்கள் விஷயத்தில் நியாயம் பேசப் போய் பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். 6ம் வீட்டில் குரு நிற்பதால் சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். புதிதாக அறிமுகமாகும் நண்பர்கள் சிலர் உங்களை தவறானப் போக்கிற்கு தூண்டுவார்கள். தங்க நகைகளை இரவல் தரவோ, வாங்கவோ வேண்டாம். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். மற்றவர்களுக்கு பணம் வாங்கித் தருவதிலும் குறுக்கே நிற்க வேண்டாம். உத்யோகத்தில் எல்லோரும் மதிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். வீண்பழிச் சொல்லிலிருந்து விடுபடும் மாதமிது.


## கும்பம்




எதிலும் தெளிவான முடிவுக ளெடுப்பவர்களே! செவ்வாய் 19ந் தேதி முதல் 6ல் அமர்வதால் எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் இருந்து வந்த பிரச்னைக்ள் தீரும். குழந்தை பாக்யம் உண்டாகும். பூர்வீகச் சொத்துப் பிரச்னைகள் சரியாகும். சகோதர வகையில் உதவிகளுண்டு. பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். முன் பணம் தந்து முடிக்கப்படாமலிருந்த வீடு, மனையை மீதிப் பணம் தந்து பத்திரப்பதிவு செய்வீர்கள். சிலர் கோலாகலமாக கிரகப்பிரவேசம் செய்வீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய உதவிகள் கிடைக்கும். புது வேலைக் கிடைக்கும். சகோதரிக்கு நல்ல வரன் அமையும். 5ல் குரு தொடர்வதால் சமூகத்தில் அந்தஸ்து கூடும். வி.ஐ.பிகள் ஆதரவாக இருப்பார்கள். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். குலதெய்வக் கோவிலை புதுப்பிக்க உதவுவீர்கள். சுப நிகழ்ச்சிகள், பொது விழாக்களில் முதல் மரியாதைக் கிடைக்கும். சூரியன் வலுவாக நிற்பதால் மனைவி உங்களின் புது முயற்சிகளை ஆதரிப்பார். நீண்ட நாட்களாக திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு இப்போது ஆடம்பரமாக திருமணம் முடியும். அரசால் அனுகூலம் உண்டு. மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். சிலர் வெளிநாடு சென்று வருவீர்கள். நிலுவையிலிருந்து வழக்கில் வெற்றி பெறுவீர்கள். யோகாதிபதி புதன் சாதகமாக இருப்பதால் அயல் நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பழைய நண்பர்கள், உறவினர்கள் தேடி வந்துப் பேசுவார்கள். சுக்ரன் 7ந் தேதி முதல் வலுவடைவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். வீடு கட்டுவீர்கள். வெளியூர் பயணங்களால் பயனடைவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். வி.ஐ.பிகளும் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள். உத்யோகத் தில் அதிகாரிகள் மத்தியில் உங்களைப் பற்றி நல்ல இமேஜ் உண்டாகும். புது பொறுப்புகள், சலுகைகள் தேடி வரும். மன நிம்மதியும், பணவரவும் அதிகரிக்கும் மாதமிது.

## மீனம்

எதிர்நீச்சல் போடுபவர்களே! கடந்த ஒரு மாத காலமாக 5ல் அமர்ந்து உங்களைப் பாடாய்படுத்தி, எதிலும் ஒரு தெளிவில்லாமல் செய்த சூரியன் இப்போது 6ம் வீட்டில் அமர்ந்ததால் குழப்பம், கோபம் நீங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை தீர்க்க புது வழி பிறக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். தொண்டை வலி, மூக்கடைப்பு வந்துப் போகும். சுக்ரன் சாதகமான வீடுகளில் செல்வதால் வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். பணவரவு உண்டு. வாகனத்தை மாற்றுவீர்கள். மனைவிவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். யோகாதிபதி செவ்வாய் 19ந் தேதி முதல் 5ல் நீச்சம் பெற்று அமர்வதால் பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். சகோதரர்கள் உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். சொத்து வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்துச் செல்லும். தந்தையாருடன் மனத்தாங்கல் வரும். அவருக்கு வேலைச்சுமை, வீண் டென்ஷன், மூட்டு வலி வந்துப் போகும். ராசிநாதன் குருபகவான் 4ல் தொடர்வதால் வேலைச்சுமை, அலைச்சல், தலைச்சுற்றல் வந்துப் போகும். தாயாருடன் விவாதம் வேண்டாம். தாய்மாமன், அம்மான், அத்தை வகையில் மனஸ்தாபம் வந்து நீங்கும். அவ்வப்போது உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். அஷ்டமத்துச் சனி தொடர்வதால் யாருக்காக வும் ஜாமீன், கேரண்டர் கையொப்பமிட வேண்டாம். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. குடும்பத்தினருடன் வெளியூர் செல்வதாக இருந்தால் விலை உயர்ந்த நகை, பணம், பத்திரத்தை பாதுகாப்பாக வைத்துச் செல்வது நல்லது. களவு போக வாய்ப்பிருக்கிறது. வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். வேலையாட்களின் குறை, நிறைகளை சுட்டிக் காட்டி அன்பாக திருத்துங்கள். உத்யோகத்தில் மூத்த அதிகாரிகளிடம் நெருக்கமும் வேண்டாம், பகையும் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப்பாருங்கள். பழைய நண்பர்களாலும், பிரபலங்களின் ஆதரவாலும் முன்னேறும் மாதமிது.





# வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்

இந்திரனின் வாகனமான ஐராவதம் அவனுக்காக காத்து நின்றது. கருடனால் பாம்பை பிடிக்க முடியும்... ஆனால், அது பரமசிவன் கழுத்தில் இருந்தால் கருடனால் நெருங்க முடியுமா! அதுபோல் தான் ஊரில் எத்தனை யானை இருந்தாலும், ஐராவத யானை வெள்ளை நிறம் என்பதால், அதற்கு மிகவும் கர்வம்.அகம்பாவிகளுக்கு என்றாவது ஒருநாள் அடி விழும். அப்படி ஒரு சோதனை ஐராவதம் யானைக்கும் ஏற்பட்டது. இந்திரன் தேவலோகம் வந்ததும், அவனை ஏற்றிக் கொண்டு இந்திரபுரிக்குள் அட்டகாசமாக நுழைந்தது. துர்வாசர் என்ற மகரிஷி இருந்தார். அவருக்கு ஒழுக்கம் ரொம்ப முக்கியம். சிறிது பிசகலாக பேசினாலோ, நடந்தாலோ கூட மூக்கு மேல் கோபம் வந்துவிடும். அப்படிப்பட்ட கோபக்காரரிடம் அந்த யானை மாட்டிக் கொண்டது. அன்று துர்வாசர் சிவபெருமானை மலர் தூவி வணங்கினார். அவரது பக்திக்கு மகிழ்ந்த ஈசன், தன் ஜடையில் இருந்த பொற்றாமரை ஒன்றை கீழே விழும்படி செய்தார். இறைவன் தந்த அந்த பிரசாதத்தை எடுத்து முனிவர் தன் கமண்டலத்தில் வைத்துக் கொண்டார். இந்திரனை தேவர்கள் ஆரவாரமாக அழைத்து வந்து கொண்டிருந்தனர். இவ்வளவு அடிபட்டும் இந்திரனுக்கு அலட்சிய குணம் மட்டும் மாறவில்லை. மேலும் விருத்திராசுரனையே வென்று விட்டோமே என்ற மமதையுடன் வந்தான். எதிரே வந்த துர்வாசர், அவன் நீடுழி வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் கமண்டலத்தில் இருந்த பொற்றாமரையை அவனிடம் கொடுத்தார். பிரசாதம் வாங்கும் போது பணிவு வேண்டும்.

இந்திரன் சற்றும் பணிவின்றி அந்த தாமரையை அலட்சியமாக வாங்கி அதை யானையின் மத்தகத்தின் மீது வைத்தான். யானை அதை தும்பிக்கையால் எடுத்து கால்களில் போட்டு மிதித்து விட்டது. துர்வாசர் நெருப்பு பொங்கும் கண்களுடன் இந்திரனையும், யானையையும் பொசுக்கி விடுவது போல பார்த்தார். தேவேந்திரா... என்று அவர் கோபத்தில் எழுப்பிய சப்தம் அந்த பிரதேசத்தையே கிடுகிடுக்கச் செய்தது. விட்டது வினை என்று இங்கு வந்தால் இந்த துர்வாசரிடம் சிக்கிக் கொண்டோமே என்று இந்திரன் நடுங்கினான். அவன் எதிர்பார்த்தபடியே துர்வாசர் சாபமிட்டார். ஏ இந்திரா! கடம்பவன நாதனான எம்பிரானின் பிரசாதத்தையா அலட்சியம் செய்தாய்! அதை மரியாதையுடன் பெற்றிருந்தால், உன் நிலையே வேறு விதமாக இருந்திருக்கும்! ஆனால், கேடு கெட்ட இந்த யானையிடம் கொடுத்தாய். அது காலில் போட்டு மிதித்தது. தேவனாகிய நீ பூலோகத்தில் பாண்டிய மன்னன் ஒருவனிடம் தோற்றுப் போவாய். அவனுடைய சக்ராயுதம் உன் தலையைக் கொய்து விடும், என்றார். தேவேந்திரனும் தேவர்களும் நடுங்கி விட்டனர். யானையில் இருந்து குதித்த இந்திரன், ஐயனே! அறியாமல் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். ஏற்கனவே பிரம்மஹத்தி தோஷத்தால் பாதிக்கப்பட்டு பல்லாண்டுகள் பூலோகத்தில் வாடிக்கிடந்த நான் மீண்டும் பூலோகம் செல்வதா? அதிலும், ஒரு மானிடனிடம் தோற்றுப்போவதா? ஐயோ! இதை விட வேறென்ன கொடிய தண்டனையை நான் பெற முடியும்? தவங்களில் சிறந்தவரே! என்னை மன்னியும், என்றான். தேவர்கள் எல்லோருமே கிரீடங்கள் தலையில் பதியும்படி அவர் காலில் விழுந்து கிடந்தனர்.

துர்வாசர் இதுகண்டு மனம் மாறினார். கோபம் உள்ள இடத்தில் தானே குணமும் இருக்கும்! அவர் இந்திரனிடம், இந்திரா! கொடுத்த சாபத்தை திரும்பப் பெற இயலாது. இருப்பினும், பாண்டிய மன்னன் பயன்படுத்தும் சக்ராயுதம் உன் தலையைக் கொய்ய வரும்போது, அது உன் கிரீடத்தை மட்டும் பறித்துச் செல்லும் நிலை வரும். தலைக்கு வருவது தலைப்பாகையோடு போகும், என்றவர் யானையைப் பார்த்தார். ஏ ஐராவதமே! பெரியவர்களிடம் பணிபுரிபவர்கள் தங்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்கு உன் வாழ்க்கை இந்த உலகத்துக்கு பாடமாக இருக்க வேண்டும். உன் வெள்ளை நிறம் அழிந்து போகும். தேவலோக யானையான நீ, பூலோகம் சென்று காட்டுக்குள் பிற யானைகளுடன் கலந்து, புழுதி படிந்து நூறாண்டு காலம் திரிவாய். பின்னர், இந்திர லோகத்தை அடைவாய், என சாபமிட்டார். வெள்ளை யானை கண்ணீர் வடித்தது. பின்னர் அது பூலோகம் வந்து பல இடங்களிலும் சுற்றித் திரிந்தது. ஒருவழியாக நூறாண்டுகள் கடந்தன. பல வனங்களில் சுற்றிய அந்த யானை, கடம்ப வனத்துக்குள் புகுந்தது. அதுவே இந்திரனால் உருவாக்கப்பட்ட மதுரையம்பதி. அங்கிருந்த சொக்கலிங்கத்துக்கு அது பொற்றாமரைக் குளத்தில் இருந்து தும்பிக்கையில் தண்ணீர் எடுத்து வந்து அபிஷேகம் செய்தது. தங்கத் தாமரைகளைப் பறித்து வந்து தூவி வழிபட்டது. அந்த யானையின் மீது இரக்கம் கொண்ட சொக்கநாதர் அதன் முன் தோன்றினார். ஐராவதமே! நீ செய்த சிவஅபசாரம் நீங்கியது. நீ இந்திரலோகம் திரும்பலாம், என்றார். யானை சிவனிடம், எம்பெருமானே! இந்த வனத்தின் அழகில் நான் மெய்மறந்து விட்டேன். மேலும் தங்களைப் பிரிய எனக்கு மனமில்லை. நான் இந்த வனத்திலேயே இருக்கிறேனே! தங்கள் விமானத்தை (கருவறைக்கு மேலுள்ள கோபுரம் போன்ற அமைப்பு) தாங்கும் யானைகளில் ஒன்றாக என்னையும் கொள்ள வேண்டும், என்றது. சிவபெருமான் அதனிடம், ஐராவதமே! இந்திரன் எனது பக்தன். அவனைச் சுமந்தால் என்னையே சுமப்பது போலாகும். நீ இந்திரலோகத்திற்கே செல், என்றார். மேலும், அதன் சுயவடிவத்தையும் தந்தார். அந்த யானைக்கோ கடம்பவனத்தை விட்டு செல்ல மனமில்லை. அது கடம்பவனத்தின் ஒரு பகுதிக்குச் சென்று அங்கிருந்த ஒரு லிங்கத்திற்கு பூஜை செய்து அங்கேயே தங்கி விட்டது. வெள்ளை யானை வந்து தங்கிய அந்த இடத்துக்கு அதன் பெயரான ஐராவதநல்லூர் என்று அமைந்தது. பின்னர், இந்திரன் அந்த யானை பற்றி அறிந்து வந்து அதை அழைக்க வந்தான். சிவபெருமானிடம் யானையின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தான் எழுப்பிய விமானம் தன் பெயரால் இந்திர விமானம் என அழைக்கப்பட வேண்டும் என்றும், வெள்ளை யானை தன்னைத் தாங்குவது போல், அந்த விமானத்தையும் ஐராவதமே எட்டு வடிவங்களில் தாங்குவது போன்ற தோற்றம் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். அதன்படியே, எட்டு வெள்ளை யானைகள் மதுரை சொக்கநாதரின் விமானத்தை தாங்கியுள்ள காட்சியை இப்போதும் காணலாம். ●

## மாயை

ஒரு நொடிப் பொழுதில் மனம் ஆசைகொள்கின்றது. இந்த ஆசையை மாயை என்கின்றோம். எமக்கு தேவையற்ற விடயங்களில் அளவிற்கு மிஞ்சிய ஆசை கொள்ளும் போது, அதுவே பேராசை எனப்படுகின்றது. இதனால், பொய், கோபம், வஞ்சகம் சூழ்கின்றது. எனவே, இறைவன் மேல் ஆசை கொள்ளுங்கள் மனம் சாந்தி பெறும்!

# 1000 ஆண்டு கண்ட தஞ்சை பெரிய கோயில்






கோவில் கட்டுமானத்தில் சுடு செங்கல் இல்லை. மரம் இல்லை. சொறிகல் என்ற பூராங்கல் இல்லை. மொத்தமும் கருங்கல். நீலம் ஓடிய, சிவப்பு படர்ந்த கருங்கல். உயர்ந்த கிரானைட். இரண்டு கோபுரங்கள் தாண்டி, விமானம் முழுவதும் கண்களில் ஏந்திய அந்தக் கோவிலின் நீளமும், அகலமும், உயரமும் பார்க்கும்போது, வெறும் வண்டல் மண் நிறைந்த அந்தப் பகுதிக்கு இத்தனை கற்கள் எங்கிருந்து வந்தன, எதில் ஏற்றி, இறக்கினர், எப்படி இழுத்து வந்தனர், எத்தனை பேர், எத்தனை நாள், எவர் திட்டம், என்ன கணக்கு. இந்தக் கருங்கற்களை செதுக்க என்ன உளி, என்ன வகை இரும்பு, எது நெம்பி தூக்கியது, கயிறு உண்டா, கப்பிகள் எத்தனை, இரும்பு உண்டெனில், பழுக்கக் காய்ச்சி உரமேற்றும் உத்தி தெரிந்திருக்க வேண்டுமே. இரும்பை சூடாக்கி எதில் முக்கினர். தண்ணீரிலா, எண்ணெயிலா. நெருப்பில் கனிந்த இரும்பை எண்ணெயில் முக்கும் கலை, ஆயிரம் வருடங்களுக்கு முன்பே உண்டா. எத்தனை பேருக்கு எவ்வளவு சாப்பாடு. அரிசி, காய்கறி எங்கிருந்து.

சமையல் பாத்திரம் எத்தனை. படுத்துறங்க எங்கு வசதி. மறைவு வசதிகளுக்கு நீர்த்துறை எது. மனிதருக்கு உதவியாய், யானைகள், மாடுகள், குதிரைகள், கழுதைகள் உண்டெனில், அதற்கு உணவும், அவற்றைப் பழக்கி உபயோகப்படுத்துவோரும் எத்தனை பேர். அத்தனை பேரும் ஆண்கள் தானா. கோவில் கட்டுவதில் பெண்களுக்கும் பங்குண்டா. தரை பெருக்கி, மண் சுமந்து, பளு தூக்குவோருக்கு மோர் கொடுத்து விசிறிவிட்டு, இரவு ஆட்டம் ஆடி, நாடகம் போட்டு, பாட்டு பாடி, அவர்களும் தங்கள் பங்கை வழங்கியிருப்பரோ. இத்தனை நடவடிக்கையில், உழைப்பாளிகளுக்கு காயம் படாதிருந்திருக்குமா. ஆமெனில், என்ன வைத்தியம். எத்தனை பேருக்கு எவ்வளவு வைத்தியர். இத்தனை செலவுக்கும், கணக்கு வழக்கென்ன, பணப்பரிமாற்றம் எப்படி. பொன்னா, வெள்ளியா, செப்புக்காசா. ஒரு காசுக்கு எத்தனை வாழைப்பழம். என்னவித பொருளாதாரம். உணவுக்கு எண்ணெய், நெய், பால், பருப்பு, மாமிசம், உப்பு, துணிமணி, வாசனை அணிகலன்கள் இருந்திருக்குமா. பாதுகாப்பு வீரர்கள் உண்டா. வேலை ஆட்களுக்குள் பிரச்னையெனில், பஞ்சாயத்து உண்டா. என்ன வகை சட்டம். எவர் நீதிபதி. இவை அத்தனையும், ஒரு தனி மனிதன், ஒரு அரசன் நிர்வகித்தானா. அவன் பெயர் தான் அருண்மொழி என்ற ராஜராஜன்.



யோசிக்க யோசிக்க, மனம் மிகப் பெரிதாய் விரிவடைகிறது. இது கோவிலா. வழிபாட்டுத் தலமா. வெறும் சைவ சமயத்துக்குண்டான கற்றளியா. இல்லை. இது ஒரு ஆற்றங்கரை நாகரீகத்தின் வரலாற்றுப் பதிவு. திராவிடம் என்று வடமொழியில் அழைக்கப்பட்ட தமிழ் மக்களின் அறிவுத் திறமைக்கு, கற்களால் கட்டப்பட்டத் திரை. காலம் அழிக்க முடியாத சான்றிதழ். காவிரிக்கரை மனிதர்களின் சூட்சம குணத்தின் வெளிப்பாடு. விதவிதமான கலைகளின், மனித நுட்பத்தின் மனத் திண்மையின் ஒருமித்த சின்னம். முப்பத்தாறு அடி உயர ஒற்றைக்கல், இருவர் கட்டிப்பிடிக்க முடியாத அகலம். இதுபோல பல கற்கள், முன்பக்க கோபுரங்களிலும் தாங்கு பகுதியாக இருக்கிறது.


திருச்சிக்கு சற்று தெற்கே உள்ள கிரனூர் தாண்டி இருக்கிற நார்த்தாமலையிலிருந்து வந்திருக்கிறது. கிட்டத்தட்ட அறுபது கிலோ மீட்டர். எப்படி கொண்டு வந்தனர் இவ்வளவு பெரிய கற்பாறைகளை. பல்சகடப் பெரு வண்டிகள். பல சக்கரங்கள் பொருத்தப்பட்ட வண்டிகள், மாடுகள் இழுத்தும், யானைகள் நெட்டித் தள்ளியும் வந்திருக்கின்றன. அந்த வழியில் ஒரு ஆறு கூட இல்லை. மலை தாண்ட வேண்டாம். மணல் பகுதி இல்லை. சரியான, சமமான பாதை. வழியெல்லாம் மரங்கள். அந்த நார்த்தாமலையில், ஆயிரம் வருடத்துக் கோவிலும் இருக்கிறது. வெட்டிய இடத்திலேயே வேண்டிக் கொள்ள கோவில் கட்டியிருக்கின்றனர்.

எப்படி மேலே போயிற்று. இத்தனை உயரம். விமானம் கட்டக்கட்ட, வண்டிப்பாதையை கெட்டியான மண்ணால் அமைத்திருக்கின்றனர். இரண்டு யானைகள் எதிரும், புதிருமாய் போவதற்கான அகலத்தில் கற்பலகைகள், மனிதர்களாலும், மிருகங்களாலும், மேலே அந்த சுழல் பாதையில் அனுப்பப்பட்டன. உச்சிக்கவசம் வரை வண்டிப்பாதை நீண்டது. அதாவது, கலசம் பொருத்தும்போது, விமானம் வெறும் களிமண் குன்றாய் இருந்திருக்கும். பிறகு...? மெல்ல மெல்ல மண் அகற்றப்பட்டிருக்கும். ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் மண் அகற்றி, தொலைதூரம் போய். குவித்திருக்கின்றனர். குவிக்கப்பட்ட இடம் இப்போதும் இருக்கிறது. சாரப்பள்ளம் என்ற இடத்திலிருந்து சாரம் அமைத்து என்று சொல்கின்றனரே... வாய்ப்பே இல்லை. அத்தனை உயரம் சாரம். கற்பாறைகளைத் தாங்கும் கனத்தோடு கட்டப்பட்டிருக்காது. சாத்தியமே கிடையாது. நொறுங்கி விழுந்திருக்கும். அப்படியானால் சாரப்பள்ளம். சாரம் போட, அதாவது மண்பாதை போட மண் தோண்டப்பட்ட இடம் பள்ளமாயிற்று. சாரம் போட தோண்டப்பட்ட போது உண்டான பள்ளம் சாரப்பள்ளம். இத்தனை மனிதர்கள் எப்படி. உழைப்பாளிகள் எங்கிருந்து. வேறெதற்கு போர்? பாண்டிய தேசம், சேர தேசம், இலங்கை, கீழ சாளுக்கியம், மேல சாளுக்கியம் என்று பரவி, எல்லா இடத்திலிருந்தும், மனிதர்களும், மிருகங்களும், பொன்னும், மணியும், மற்ற உலோகங்களும், அதற்குண்டான கைவினைஞர்களும் இங்கே குவிக்கப்பட்டிருக்கின்றனர். கோவில் கட்ட போரா, போர் செய்து ஜெயித்ததால் கோவிலா. இரண்டும் தான். சோழர்கள் போர் செய்யப் போகவில்லை எனில், பாண்டியர்கள் மேலை சாளுக்கியர்கள் போர் துவக்கி ஜெயித்திருப்பர். (வெகு காலம் கழித்து ஜெயித்தனர்.) எனவே, எதிரியை அடக்கியது போலவும் ஆயிற்று, இறைபணி செய்தது போலவும் ஆயிற்று. இது சோழ தேசத்து அரசியல் சாணக்கியம். கல் செதுக்க விதவிதமான சிற்பிகள். மேல் பகுதி நீக்க சிலர். தூண், வெறும் பலகை, அடுக்குப்பாறை செய்ய சிலர். அளவு பார்த்து அடுக்க சிலர். கருவறைக் கடவுள் சிலைகள் செய்ய சிலர் என்று பலவகையினர் உண்டு. உளிகள், நல்ல எஃகு இரும்பால் ஆனவை. பெரிய கல் தொட்டியில் எண்ணெய் ஊற்றி, பழுக்க காய்ச்சிய உளிகளை சட்டென்று எண்ணெயில் இறக்க, இரும்பு இறுகும். கல் செதுக்கும் கோவிலுக்குள், இப்படிப்பட்ட கல்தொட்டி இன்னும் இருக்கிறது. கயிறு, கம்பிகள் சிறிதளவே பயன்பட்டன. உயரப் பலகைகள் போட மண் உபயோகப்பட்டது.

எல்லா ஊரிலிருந்தும், தஞ்சைக்கு உணவு தானியங்கள் வந்திருக்க வேண்டும். ஆடுகள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆடுகள் வளர்ப்பது ஒரு கலையாக, கடமையாக இருந்திருக்கிறது. சாவா மூவா பேராடுகள் என்ற வாக்கியம் வழக்கத்தில் இருந்திருக்கிறது. 96 ஆடுகள் இருப்பினும், அந்த ஆட்டுக் கூட்டம் குறையாது. குட்டி போட்டு வளரும். வளர்க்கப்பட வேண்டும். நல்ல மருத்துவமனைகள் கட்டப்பட்டிருக்கின்றன. விதவிதமான மருந்துப் பெயர்கள் பட்டியலிடப் பட்டிருக்கின்றன. அறுவை சிகிச்சை தெரிந்தவர்கள் இருந்திருக்கின்றனர். மருத்துவமனை சார்ந்த தொழிலாளர்கள் உண்டு. மருந்துக் கிடங்கு உண்டு. மூலிகை தேடி சேகரிப்போர் உண்டு. நீர் ஊற்றுபவர் உண்டு. கணக்கு வழக்குகள், ஓலைச் சுவடிகளில் பதிவு பெற்றிருக்கின்றன. துல்லியமான கணக்கு வைக்கப் பட்டிருக்கிறது. தானங்கள் கல்வெட்டாய், குன்றிமணி தங்கம் கூட பிசகாமல் செதுக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சொல்ல ஒரு ஆள். செதுக்க ஒரு ஆள். நேர்

பார்க்க ஒரு ஆள். வீரர்களுக்குள் சண்டை நடந்ததெனில், பஞ்சாயத்து நடந்ததற்கான கல்வெட்டுகள் உண்டு. மாமன்னர் ராஜராஜன் கண்ட விற்போர் உண்டு. ஒண்டிக்கு ஒண்டி சண்டை செய்ய விட்டிருக்கின்றனர். இதில் ஒருவன் தப்பாட்டம் ஆடி இருவருமே இறந்ததால், இருவரின் மனக்கேதமும் தீர்க்க, கோவில் விளக்கெரிக்க வேண்டி, யார் மனஸ்தாபத்திற்குக் காரணமோ, அவர்களுக்கு அபராதம் விதித்திருக்கின்றனர். 96 ஆடுகள் அபராதம். அதாவது, சாவா மூவா பேராடுகள்.

தஞ்சையிலுள்ள ஒரு கோவிலில் இக்கல்வெட்டு இருக்கிறது. கோவில் கட்டியாகி விட்டது. நிர்வகிக்க யார் யார். அவருக்கென்று வீடு ஒதுக்கி, வீட்டு இலக்கம் சொல்லி, பெயர் எழுதி, கல்வெட்டாய் வெட்டியிருக்கிறது. இடது சிறகு மூன்றாம் வீடு, நக்கன் பரமிக்கு பங்கு ஒன்றும், இடது சிறகு நான்காம் வீட்டு எச்சுமண்டைக்கு பங்கு ஒன்றும் என்று பல நூறு பெயர்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. வீணை வாசிக்கும் ஆதிச்சன் இறந்தமையால், அவன் மகனுக்குப் பங்கு அரையும் என்று சம்பளம் குறைக்கப்பட்டிருக்கிறது. கோவில் பணியில் உள்ள எல்லா தொழிலாளர்கள் பெயரும், தொழிலும் எழுதப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, கோவிலுக்கு யார் தானம் தந்தனரோ, அவர்கள் தந்தது சிறு தொகையானாலும், பெரிய தொகையானாலும், தங்க ஆபரணமானாலும், கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது. முதல் தானம் ராஜராஜனுடையது. ''நாங்கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும் என்று கல்வெட்டு துவங்குகிறது. தான் மட்டும் இக்கோவிலைக் கட்டியதாய் ஒரு சிறு நினைப்பு கூட அந்த மாமனிதனுக்கு இல்லை. கோவில் கட்டிய இந்த மனிதர்கள் எப்படி இருப்பர். கொஞ்சம் தெரிய வருகிறது.



விமானத்தினுள்ளே உயிர் ஓவியங்கள் உள்ளன. சட்டை அணிந்த தளபதிகள், பூணூல் அணிந்த அந்தணர்கள், இடுப்பில் பாவாடையும், மேல் போர்வையும் அணிந்த அரசிகள், இடதுபக்க பெரிய கொண்டையோடு, தாடியோடு மாமன்னர் ராஜராஜன், அலங்காரமான, மிக அழகான கறுப்பு, சிவப்பு, மாநிறம் கொண்ட தேவரடியார்கள் என்று அழைக்கப்பட்ட நடனமாதர்கள், சிதம்பரம் கோவில் நடராஜர், விதவிதமான முகங்கள்; ஒன்று போல் ஒன்று இல்லை. உயிர் ததும்பும் முகபாவங்கள். தட்டை ஓவியங்கள். ஆனால், தெளிவாகத் தெரியும் ஒரு உலகம். மாமன்னர் ராஜராஜனைக் கோவில் கட்டத் தூண்டியது எது. போரா கலைஞர்கள் செய்திறனா. இல்லை. பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணம் முக்கிய தூண்டுதல். கோபுர வாசலில் உள்ள சுவர்களில், சிறிய சிறிய சிற்பங்கள் தெரிகின்றன. கண்ணப்ப நாயனார், பூசலார், கண்டேஸ்வரர் மன்மத தகனம் என்று, முக்கால் அடி உயர பதுமைகளைச் செதுக்கி வித்தை காட்டியிருக்கின்றனர். அடுத்த விநாடி குழந்தை பிறக்கும் என்ற தாயின் உருவம், மன்னர் முகங்கள், புராண காட்சிகள் எல்லாம், கோவில் கோபுரங்களில் உண்டு.

இது என்னவித கோவில் - விமானம் உயரம், மிக உயரம். கோபுரங்கள் சிறியவை. இது ஆகம விதியா. புதிய சிற்ப சாஸ்திரமா. உள்ளே நுழைந்ததும் நந்தியை மனதால் அகற்றிவிடுங்கள். எதிரே உள்ள விமானம் தான் சிவலிங்கம். வானம் ஒரு சிவலிங்கம். விமானத்திற்குள் உள்ள வெளி ஒரு சிவலிங்கம். வெளிக்கு நடுவே கருவறையில் கருங்கல் சிவலிங்கம். எல்லாம் சிவமயம். இந்த விமானத்திற்கு மாமன்னர் ராஜராஜன் வைத்த பெயர், தென்திசை மேரு! உள்ளே கடவுள் பெயர் பிரகதீஸ்வரர். தமிழில் பெரு உடையார். வடக்கே உள்ள கைலாயத்தின் மீது காதல். கைலாயம் போகவில்லை. கைலாயத்தை இங்கே கொண்டுவந்துவிட்ட உடையார் பெரிய உடையார், இது போதுமா கடவுளைச் சொல்ல. ரொம்ப பெரிசு ஐயா கடவுள். கருவறைக்கு அருகே உள்ள துவாரபாலகர் பதினேழு அடி உயரம். அவர் கால், கதையில், கதையைச் சுற்றி மலைப்பாம்பு. மலைப்பாம்பு வாயில் பெரிய யானை. அதாவது, யானையை விழுங்கும் பாம்பு. பாம்பு சுற்றிய கதை. கதையில் கால் வைத்த துவாரபாலகர், அவர் கை விஸ்மயம் என்ற முத்திரை காட்டுகிறது. உள்ளே இருப்பதை விவரிக்க முடியாது என்று கை விரிக்கிறது. விவரிக்கவே முடியாத சக்திக்கு, கடவுளுக்கு, தன்னாலான அடையாளம் காட்டியிருக்கிறார் மாமன்னர் ராஜராஜன். அதுவே பிரகதீஸ்வரம். அதுவும் விஸ்வரூபம், இன்றளவும். ●



# நீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

சோழவள நாட்டிலே அமைந்துள்ள எருக்கத்தம் புலியூர் என்னும் நகரில் ஓர் பெரிய சிவன் கோவில் உண்டு. அக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் சிவனுக்கு, நீலகண்டேசுவரர் என்றும், சக்திக்கு நீலமார்க் கண்ணம்மை என்றும் பெயர். தலவிருட்சம் வெள்ளெருக்கு. இத்தகைய தெய்வ வளமிக்க நகரில், பாணர் மரபில் பிறந்தவர் நீலகண்ட யாழ்ப்பாணர். இவரது மனைவி மதங்க சூளாமணி. இசையே உருவெடுத்த பாணரும், அவரது வாழ்க்கைத் துணைவியாரும், நீலகண்டேசுவரர் புகழை யாழில் இனிமையுடன் உள்ளம் உருக இசைத்து எல்லையில்லா இன்பம் எய்தினர். இவர்கள் சிவத்தலங்கள் தோறும் சென்று யாழ் இசைத்து எம்பெருமான் அருள் பெற்று பெருமையுற்றனர். சோழவள நாட்டிலுள்ள எல்லா சிவன் கோவில்களையும் கண்டுகளித்துப் பேரின்பம் பூண்ட பாணரும் அவரது மனைவியாரும் மதுரையம்பதிக்குச் சென்றனர். பாணர் தம் மனைவியோடு திரு ஆலவாய் அண்ணலாரது ஆலயத்தின் புறத்தே நின்று எம்பெருமானின் புகழை யாழில் சுருதிகூட்டி பண்ணமைத்துப் பாடிக் கொண்டிருந்தார். பண்டை நாட்களில், பாணர் மரபினோர் ஆலயத்துள் சென்று இறைவனை வழிபடுவது கிடையாது. புறத்தே நின்று வழிபடுவதையே நியதியாகக் கொண்டிருந் தார்கள். பாணரின் யாழிலே உள்ளம் உருகிய சோமசுந்தரக் கடவுள் தமது பக்தனைக் காக்க திருவுள்ளம் கொண்டு மதுரையம்பதி சிவத்தொண்டர்கள் கனவில் எழுந்தருளினார். யாழ்ப்பாணரையும், அவரது மனைவியாரையும் கோவிலுள் அழைத்து வந்து தரிசனம் செய்வதற்கு ஆணையிட்டார். அவ்வாறே பாணர் கனவிலும் எழுந்தருளினார்.

பாணரே ! உம்மை, எம்மிடம் அழைத்து வந்து தரிசனம் செய்து வைக்க ஆவன செய்துள்ளோம் என்று அருள்வாக்கு சொல்லி மறைந்தார். மறுநாள் வழக்கம்போல் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மனைவியாருடன் கோயிலின் புறத்தே அமர்ந்து யாழ் இசைத்து தம்மை மறைந்த நிலையில் பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது தொண்டர்கள் அவர்களைக் கண்டு வணங்கி எம்பெருமானின் ஆணையைக்கூறி அவர்களை அகத்து எழுந்தருளுமாறு பணிவோடு கேட்டுக் கொண்டனர். அவர்களும் தொண்டர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கோயிலுக்குள் சென்று மண்டபத்தில் அமர்ந்தனர். பக்தி வெள்ளத்தில் மூழ்கிய அன்பர் இருவரும் தரை ஈரமாக இருப்பதனை கூட பொருட்படுத்தாமல், ஈரத் தரையில் அமர்ந்து மெய்மறந்து யாழை மீட்டி பாடத் தொடங்கினர். இவருடைய இன்ப இசையில் மயங்கிய மதுரையம்பதி ஈசன் தரையின் குளிர்ச்சி பட்டு யாழின் சுருதி கெட்டுவிடுமே என்று திருவுள்ளம் பற்றினார். அசரீரி வாயிலாக பெருமான் நிலத்திலிருந்து பாடினால் ஈரத்தால் யாழ் கெட்டுவிடும். எனவே அவர்கட்கு அமர்ந்து பாடப் பலகை ஒன்று இடுங்கள் என்று திருவாய் மலர்ந்து அருளினார். அப்பொழுது அத்தொண்டர்கள் அவர்களுக்கு அழகிய பீடம் ஒன்றை எடுத்து வந்து அதன் மீது அமர்ந்து பாடுமாறு செய்தனர். பீடத்தில் அமர்ந்த யாழ்பாணரும், மதங்கசூளாமணியும் அழகிய இனிய தெய்வ சக்திமிக்கப் பக்திப் பாடல்கள் பலவற்றைப் பாடி அனைவரையும் மெய்மறக்கச் செய்தனர். அதன் பிறகு இருவரும் மதுரையம்பதி யில் நெடுநாள் தங்கியிருந்து தங்கள் யாத்திரையைத் தொடர்ந்தனர். அடுத்துள்ள பல சிவத்தலங்களையும் தரிசித்தவாறு திருவாரூரை அடைந்தனர்.

திருவாரூர் தியாகேசப்பெருமானும், பிராட்டியாரும் பாணர் இசையில் மயங்கினர். அன்றிரவு ஈசன் திருவாரூர் மெய்யன்பர்கள் கனவிலே எழுந்தருளி,எமது அன்பன் பாணனுக்கு திருக்கோயிலுள் வேறு வாயில் அமைத்து அதன் வழியாகக் கோயிலுக்குள் அழைத்து வந்து இசை பாடத் துணைபுரிவீர்களாக என்று கட்டளையிட்டருளினார். மறுநாள் தொண்டர்கள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் எழுந்தருளும் பொருட்டு வடதிசையில் வாயில் ஒன்று நிர்மாணித்தனர். அதன் வழியாக அவரையும், அவரது மனைவியாரையும் எம்பெருமான் திருமுன் எழுந்தருளச் செய்தனர். யாழ்ப்பாணர் வீதிவிடங்கப் பெருமானைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்து பக்திப் பாடல்கள் பாடினார். சில நாட்களில் அங்கிருந்து புறப்பட்டார். சிவத்தலங்கள் பலவற்றைத் தரிசித்துக் கொண்டே, சீர்காழியை வந்தடைந்து சம்பந்தரை வணங்கினார். பாணரின் யாழிசையில் எல்லையில்லா இன்பம் எய்திய திருஞான சம்பந்தப் பெருமான் அவரையும், அவர் தம் மனைவியாரையும் தம்முடனேயே இருந்து தேவாரப் பதிகங்களை யாழில் இட்டு இசைத்து பாடும் வண்ணம் அருள்புரிந்தார். இறுதியில் திருபெருமணநல்லூரில் ஞானசம்பந்தர் திருமணத்தில் தோன்றிய சிவஜோதியில், பாணரும், அவர்தம் மனைவியாரும் கலந்து சிவபதவியை அடைந்தனர்.

***குருபூஜை: திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரின் குருபூஜை வைகாசி மாதம் மூலம் நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது.***

# மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

## மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்




எமது ஈழமணித் திருநாட்டின் வடபால் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள 74 அடி உயரமாக ஓங்கி உயர்ந்த கோபுரம் அவ்வழியாற் போவோரையும் வருவோரையும் அரைநிமிட நேரமாவது சிந்திக்க வைப்பது. பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய், வேதாகம நெறிமுறை பேணிக் காலதத்துவமும் கன்மதத்துவமும் கடந்து, காலங்காலமாகக் கருணைப் பேரொளி வீசி வேத மணங்கமழும் ஞானப்பெருங்கோவிலாக விளங்கிவரும் வரலாற்றுப் பெருமை மிகு புண்ணியம்பதி மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலேயாகும்.

இப்புண்ணியம்பதியின் வரலாற்றை நோக்கின் இலங்கை வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. விஜயன் இலங்கைக்கு வந்து ஆட்சியை ஆரம்பித்த காலத்தில் சமயாசார முறைப்படி வாழ்ந்த மக்களைத் தம் வசப்படுத்தும் நோக்குடன் மக்கள் விருப்பப்படி சமயானுஸ்டானங்களை நடாத்துவதற்கு ஏதுவாக ஆலயங்களை அமைப்பித்ததுடன் இக்கோவிலும் அமைக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இத் தொன்மைமிகு வரலாற்றை மூன்று காலகட்டங்களாகப் பிரித்து ஆராய்தல் நலம் எனக் கருதுகின்றேன்.

1. விஜயன் வந்தது முதல் - கி.பி. 792 வரை
2. கி.பி. 792 முதல் - கி.பி. 1546
3. கி.பி. 1546 முதல் இன்று வரை

### கோயிற்கடவை :

தனதாட்சிக்குப் பாதுகாப்பாக இலங்கையின் நான்கு திக்குகளிலும் சிவாலயங்களை எழுப்புவித்த துடன் திருத்தம்பலேஸ்வரத்திற்கு அண்மையில் கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்தான் என அறியமுடிகின்றது. அக்காலத்தில் இவ்விடம் கோயிற்கடவை என்னும் பெயரில் திகழ்ந்ததுடன் காசாத்துறை, திருத்தம்பலேஸ்வரம், குமாரத்திபள்ளம் ஆகிய இடங்களையும் உள்ளடக்கிய ஒரு பரந்த குறிச்சியாக விளங்கியது. இக்கோயிலானது ''தலங்க தலங்க மரனடி காட்டும் சலதியி'' என கடலிற் செல்லும் மிக்க வலிய மரக்கலத்தின் கொடிமரம் தங்கள் நிழலிற் செல்லுமாறு உயர்ந்திருக்கின்ற ஆலமரங்கள் சூழ்ந்த இடம் எனக் குறிப்பிடுவதிலிருந்து ஆலமரச் சோலையில் அமைந்த கோவிலாகத் தெரிகின்றது. இவ்வாலமரச் சோலையானது ''வட்டக வட்டகமார் மாவைய்'' என வட்டமான மலைப் பிளவுகளுக்கு நடுவிடத்தே பொருந்திய மாவைப்பதி என்பதிலிருந்து பள்ளமான பகுதியில் அமைந்திருக்கின்றதென்பதும் பள்ளமான பகுதியாகையால் நீர்வளமுள்ள இடம் என்பதும் பெறப்படும். அத்துடன் இது மகாயெற்றிபுரம் என்றும் அழைக்கப்பட்டது. மகா-பெரிய; யெற்றி - ஆலமரம்; புரம் - நிற்குமிடம். இவ்வாலயத்தில் செம்பினால் உருவாக்கப்பட்ட உயரமுள்ள வேல் மூலமூர்த்தியாக வணங்கப்பட்டது. கதிரையாண்டவர் என்ற பெயரிலிருந்தே மூலமூர்த்தி வேல் என்பது பெறப்படுகின்றது. பரிவார மூர்த்திகளாக செம்பினால் உருவாக்கப்பட்ட 5வு - உயரமுள்ள சிவலிங்கம் ஒன்றும் கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட 9'' உயரமுள்ள விநாயகரும், இருந்திருக்கின்றன. இவை இன்றும்



ஆதிமூலத்தில் வைக்கப்பட்டு ஆதிப்பூசையாக முதற்பூசை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது-. இக்கோவிலை நிர்வகிப்பதற்காக காசிப் பிராமணரான வாமதேவாசாரியனையும் அவன் கன்னி விசாலாட்சி அம்மையாரையும் அழைப்பித்து அக்கிரகாரம் வேண்டிய பொருள்களையும் கொடுத்துதவினான்.

இவ்வாலயம் பற்றி இன்னொரு கருத்தும் நிலவிவருவதை அறியமுடிகின்றது. ஆலமரத்தடி நிழலில் வெள்ளி வேலாயுதத்தை வைத்துச் சடையன் என்பவர் வழிபாடாற்றி வந்ததாக 'பெரியீர் தங்களது பெயர் யாது? இக்கோவில் எழுந்த வரலாறு யாது? என மாருதப்புரவீகவல்லி வினாவியதற்கு 'அம்மையே! அடியேன் பெயர் சடையன். இங்கு வதியும் வேளாண்குடியிற் பிறந்தேன். முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் இப்பதியைக் கோயிற்கடவை என்பர். தொன்று தொட்டு இவ்விடத்தில் வெள்ளி வேலாயுதத்தை வைத்துப் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வருகிறோம் என்று இடம்பெற்ற சம்பாஷணை யிலிருந்து அறியமுடிகிறது.

எவ்வாறாயினும் இன்று தொல்பொருளாகப் பேணப்படும் விக்கிரங்களே இங்கு கோயில் இருந்ததென்பதற்கு ஆதாரமாக விளங்குகின்றது. மேலும் இங்கு தொல் பொருளாக கோடி லிங்கம் ஒன்றும் பேணப்படுகின்றது, இவ்விக்கிரகம் எக்காலத்தைச் சேர்ந்ததென்பதற்கு ஆதாரமில்லை, ஆராய்ச்சிக்குரியது.

***மாவிட்டபுரம்:***

மதுரை மன்னன் உக்கிரப்பெருவழுதிக்குப் புத்திரியாகப் பிறந்த மாருதப்புரவல்லி, முற்பிறப்பில் அயக்கிரீவ முனிவரின் சாபத்தினால் குன்மநோயும் குதிரை முகமும் பெற்றமையால் தனது விமோசனத்திற் காகத் தானதர்மங்கள் பல செய்ததுடன் பல திருத்தொண்டுகளும் செய்துவரும்பொழுது சாந்தலிங்க முனிவர் ''இலங்கையின் வடபாலுள்ள மலைச்சாரலிலே சமுத்திரத்தோடு சங்கமமாகும் அந்தர் வாவி எனப் பெயர் பெறும் உத்தம நன்னீர்த் தீர்த்தம் உள்ளது. அங்கு சென்று வழிபடின் நோய் நீங்கும்'' என்று கூறியதற்கேற்ப இலங்கைக்கு வந்து மாணிக்க கங்கையில் நீராடி கதிரைவேற் பெருமானை வணங்கியிருக்குங்காலை அசரீரி கூற்றுப்படி ''வடகோடியிலே கடற்கரையில் காங்கேயனை நினைத்து மூழ்குவையேல் நின் எண்ணம் நிறையும்'' என்றதற்கேற்ப 'கீரி மலையில் வந்திறங்கி வளவர்கோன் குமாரத்தி பள்ளம்'' என்னுமிடத்தில் பாளயமிட்டு இருந்து அந்தர் வாவிக்குச் சென்று தீர்த்தமாடி வருவாளாயினள். தேகம் விகாரப்பட்டிருந்த தாற் பிறரறியாதவாறு தீர்த்தமாடப் போக நினைத்து தங்கியிருந்த இடமான குமாரத்தி பள்ளத்திலிருந்து தீர்த்தக்கரை வரை சுரங்கப்பாதை வெட்டுவித்து, அதன் வழி சென்று தீர்த்தமாடி வருவாளாயினள். இச் சுரங்கப்பாதை தான் 1968ஆம் ஆண்டில் சீமெந்துத் தொழிற்சாலைக்குக் கல்தோணடும் பொழுது கீரிமலைக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கப்பாதை யாக இருக்கலாம். அது மூடப்படாமல் தொடர்ந்து ஆராயப்பட்டிருப்பின் எவ்விடம் வரை செல்கின்றது என்பது பற்றிய விளக்கத்தை அறிந்திருக்கலாம். இதுவும் ஆராய்ச்சிக்குரியதாகவே விளங்குகின்றது.

இவ்வாறு வழிபட்டு வருங்கால் அவளது நோய் நீங்கிவிடவே இவ்விடத்தை மகாபுண்ணிய புரமாக்க விரும்பிப் பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் அறிவித்திருக்குங்கால் நகுலேஸ்வரப் பெருமான் கனவிலே தோன்றி ''பெண்ணே நீ உனது எண்ணத்தை நிறைவேற்றவும் எல்லா உயிர்களும்சுகம்பெறவும், கதிரேசன் கோயிலைப் புதிதாக நிர்மாணி'' எனத் திருவருள் பாலித்தார். உடனே இளவரசி தான் தினசரி வணங்கிய கோயிலைப் புதிதாக நிர்மாணிப்பதற்கான ஆயத்தங்களைத் தந்தையின் அனுமதியுடன் மேற் கொண்டாள். திசையு-க்கிரப் பெருவழுதி மன்னன் மகளின் நோய் நீங்கியதை அறிந்து சந்தோசமடைந்த துடன், கட்டிடம் அமைக்கவல்ல சிற்பாசாரியர்களையும், ஏனைய வல்லுநர்களையும், வேண்டிய பொருள்களை யும், கட்டிட வேலைகளை மேற்பார்வை செய்வதற்குத் தளபதி மகாவட்டன் என்பவனையும் அனுப்பி வைத்துடன், தனது இராசதானியிலுள்ள சிற்ப வல்லுநர் களைக் கொண்டு உத்தமோத்தமமான விசேடங்களைக் கொண்டதும் உரிய இலட்சணங்களோடுள்ளதுமான விக்கிரகங்களைச் சிற்ப சாஸ்திர விதிகளுக்கமையச் செய்வித்து அனுப்பிவைத்தான். கோவில் நிர்வாகத்தை நடாத்தவும் பூசைகள் செய்யவும் சிதம்பரம் தில்லைமூவாயிரவருள் ஒருவரான பெரியமனத்துள்ளார் என்பவரையும் அனுப்பிவைத்தான். இவை கோயிற் கடவையின் துறைமுகமான காசாத்துறையில் வந்து


சேர்ந்தன. காங்கேயமூர்த்தி கொண்டுவந்து இறக்கப் பட்டதினால் காங்கேயன்[illegible] எனப் பெயரிடவேண்டு மென்று தீட்சிதரின் விருபபப்படி பெயர் மாற்றியமைக்கப் பட்டது. இன்றுவரை அவ்வாறே வழங்கியும் வருகின்றது.


குதிரைமுகமாக விகாரப்பட்டிருந்த இளவரசியின் முகம் மாறப்பெற்ற காரணத்தால் இவ்விடத்திற்கு வடமொழியில் ''தூரகானன விமோசனபுரி'' எனப் பெயர் வழங்கப்பட்டிருந்தது. இதே கருத்தில் தமிழில் மா-விட்டபுரம் - குதிரைமுகம் (மா-குதிரை) நீங்கிய இடம்; (மா-பெரிய) பெருநோய் நீங்கிய இடம் எனப் பெயர் பெறலாயிற்று. ''கீரிமா மலையிலாடினள் தீர்த்தம், அம்முகமகன்றது அன்னதால் மாவிட்டபுரம்'' என்று வையாபாடல் கூறுகின்றது. மேலும் மாருதப்புரவல்லிக் காக மாயவட்டன் என்ற தளபதி இக்கோயிலை நிர்மாணிப்பித்தான். இதனால் ''மாவிட்டன்புரம்'' என்ற பெயர் மருவி மாவிட்டபுரம் எனலாயிற்று என்பாருமுளர். சூரசம்காரத்தின் போது மாமர வடிவாக வந்த சூரன் அவ்வடிவினை விட்ட இடம் மா-விட்ட - புரம் (மா - மாமரம்) எனக் கொள்வாருமுண்டு. இவ்வாறு மாவிட்டபுரம் என்ற பெயர் சம்பந்தமாக பல கருத்துக்களும் இடம்பெறுகின்றது.

''கண்டன கண்டன மார்கடன் மாவை'' உயர்வாகக் கருதப்படும் முத்தும் மணியும் பவளமுமாகிய செல்வம் நிறைந்த கடல் சூழ்ந்த மாவைப்பதி எனவும் கண்டகி தீர்த்தம், அந்தர்வாவி தீர்த்தம், காங்கேசன் துறைமுகம் போன்றவை மாவிட்டபுரத்திற்கு கடலை எல்லைகளாகக் கூறுகின்றன. அத்துடன் ''புரம்'' என்ற சிறப்புப் பெயர் பொருந்தியுள்ளமை அது நாட்டின் இராசதானியாக ஒருகால் இருந்ததென்பதை விளக்கிக் கொண்டிருக்கிறது என்றும் கருதப்படுகின்றது. ''நியாயமில் அங்காடி'' என்பதிலிருந்து ஒப்பில்லாத கடை வீதிகளில் போக்குவரத்துக்களால் உண்டாகும் முழக்கம் இடையறாதிருக்கும் திறத்தைத் தன்கண் உள்ளதாகக் காட்டிய மாவைப்பதி வண்டிகளைக் கூறவே, பல்வேறு தேச மக்களின் போக்குவரத்தும் அவர்கள் செய்யும் பண்டமாற்றும், என்ற இன்னோரன்ன செயல்களால் பெருமுழக்கமும் கடற்கரைக் கண்ணதாகலின் காலில் வரும் மக்கள் கூட்டமேயன்றிக் கலத்தில் வரும் பல்வேறு தேசமக்களின் தொகைக்கு அளவின்றாம் என இங்குள்ள சன நெருக்கடியையும் இப்பகுதியின் சிறப்பையும் விளங்குகின்றார்.

மாருதப்புரவல்லி வழிபட்ட கதிரேசன் கோவில் ஆகமவிதிப்படி சிற்பசாஸ்திர விதிகளுக்கமையக் கட்டப்பட்டு கி.பி. 792 ஆனி உத்தர நன்நாளில் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. மூலமூர்த்தியாக கருங்கல்லினாற் செய்யப்பட்ட வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் மயில் வாகனத்தில் நின்ற திருக்கோலத்திலும் பரிவார மூர்த்திகளாக கருங்கல்லினாற் செய்யப்பட்ட விநாயகரும், வைரவரும் பிரதிட்டை பண்ணப்பட்டார்கள். உற்சவ மூர்த்தியாகப் பஞ்சலோகத்தினாற் செய்யப்பட்ட வள்ளி தேவசேனா சமேத முத்துக் குமார சுவாமியும் விளங்கினர். ஆலயத்தைச் சூழச் சுற்றுமதிலும், கிழக்கிலும் மேற்கிலும் கோபுரங்களும் அமைக்கப்பட்டன. ஆலயத்தின் உட்பிரகாரம் திருமஞ்சனக் கிணறும் வழிபடுவோரின் வசதிக்காகக் கோபுர வாயில்களுக்கண்மையில் கிழக்கிலும் மேற்கிலும் இரு கிணறுகளும் கோவிலின் பரிபாலகருக்கென - ஆதீன கர்த்தா - கோவிலின் தெற்குப் பாகத்தில் ஒருவீடும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது. இன்றும் இவ்விடத்திலுள்ள வீட்டிலேயே ஆதீன கர்த்தாக்கள் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோவிலின் பரிபாலனத்திற்கும் பூசைகளை நடத்துவதற்கும் பெரிய மனத்துள்ளார் நியமிக்கப்பட்டதும் பழைய கதிரையாண்டவர் கோயிற் பூசகர்களான காசிப் பிராமணர்கள் திருத்தம்பலேஸ்வரத்தை மட்டும் நிர்வகித்தனர். எனினும் இவர்களில் 'சாம்பசிவ ஐயரின் மகள் வாலாம்பிகையைப் பெரிய மனத்துள்ளார் விவாகம் செய்ததுடன், இரு பகுதியினருக்கும் தொடர்பு ஏற்படலாயிற்று. கோயிலுக்கு வேண்டிய இசை விற்பன்னர்கள், கலைஞர்கள், மாலை கட்டுவோர் வெள்ளை கட்டுவோர் போன்றோரும் சோழ நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு இங்கு குடியேற்றப் பட்டார்கள். இவர்களின் சந்ததியினரே இன்றும் இத்தொழில்களைச் செய்து வருவது போற்றுதற்குரியதாக அமைகின்றது.





பெரிய மனத்துள்ளாரின் பின் மகன் சிதம்பர தீட்சிதரும் பின் அவர் மகன் சின்ன மனத்துள்ளாரும் கோவிலைப் பரிபாலித்து வந்தனர். 1505ம் ஆண்டில் ஏகாம்பர ஐயரால் வைகாசி விசாக நட்சத்திரத்தில் தொடங்கி, கந்தசஷ்டியில் உருவாகித் திருக்கார்த்திகையில் உற்சவமூர்த்தியாக, வள்ளிதேவசேனா சமேத சண்முகப் பெருமானுக்குக் கும்பாபிசேகம் இடம்பெற்றது. கி.பி. 792 இற்கும் 1546 இற்கும் இடைப்பட்ட கால வேலைப்பாடுகள் பற்றிய இவ்வொரு சான்று மட்டும் தான் எமக்குக் கிடைக்கின்றது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி இந்துக் கோவில்களை இடித்து, அக்கற்களைப் பயன்படுத்தி அவ்விடங்களுக்கண்மையில் கிறிஸ்தவ தேவாலயங்களை அமைத்த பொழுது 1546இல் இக்கோவிலும் இடிபாட்டிற்குள்ளானது. அப்பொழுது இங்குள்ள வேதியர்கள் பாலஸ்தாபனம்செய்து விக்கிரகங்களையும், குத்து விளக்குகள், தீபங்கள் போன்ற தளபாடங்களையும் கயிற்றிற் கட்டித் திருமஞ்சனக் கிணற்றுள் இறக்கிப் பாதுகாப்போடு மூடி வைத்தனர். இதன் ஞாபகார்த்தமாகக் கிணற்றின் வடக்குப் பக்கத்தில் காஞ்சிமாவை நாட்டி வைத்தார்கள். இம் மரமே இன்று இக்கோவிலின் தல விருட்சமாக விளங்குகின்றது. இதில் எக்காலமும் பூவும் காயும் இருப்பது ஓர் அற்புதமானது. கோவிற் பணிவிடைகாரனாக இருந்த குமாரசாமி அல்லது சங்கிலி என்னும் பண்டாரம் இவ்வாலய வரலாற்றையும் சம்பவங்களையும் ஒழுங்குத் திட்டங்களையும் அடக்கிய செப்புப் பட்டயத்தை களவாடிச் சென்றதாகச் செய்தியொன்றுண்டு.

### காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கை மக்களுக்கு ஓரளவுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டபொழுது கோவிலின் பரிபாலகராக வரவேண்டிய குமாரசுவாமிக் குருக்கள் சபாபதிக் குருக்கள் மகிழ்ச்சி பொங்க ஆலயத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய முற்பட்டார். காரைக்குடி ஸ்தபதிகளால் வெண்கற்களும் சுண்ணாம்புக் கற்களும் கொண்டு ஆகமவிதிப்படி கட்டப்பட்டு 1782 ஆனி உத்தரத்தில் 'கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்பொழுது கிணற்றுள் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்த விக்கிரகங்களான மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகளான விநாயகர், வைரவர், உற்சவ மூர்த்திகளான முத்துக்குமாரசுவாமி, சண்முகர் ஆகியவை எடுக்கப்பட்டு அவை திரும்பப் பிரதிட்டை பண்ணப்பட்டதுடன், மகாலட்சுமி, சண்டேஸ்வரர் பரிவார மூர்த்திகளாகவும் மயூரம், பலிபீடம் ஆகியவையும் அசையா மணிக்கோபுரமும் செப்புக் கொடிஸ்தம்பமும் புதிதாக அமைக்கப்பட்டுக் கோவில் முன்னரிலும் பெரிதாக விளங்கியது. இலங்கையிலேயே முதன்முதல் கொடிஸ்தம்பம் அமைக்கப்பட்ட பெருமையும் உற்சவம் நடத்தப்பட்ட பெருமையும் இத்தலத்திற்கே உரியது. திருப்பணி வேலைகளைக் கவனித்ததுடன் வேண்டிய திருவாபரணங்கள், வாகனங்கள், தளபாடங்கள் போன்றவற்றைச் சேகரித்தும் நித்திய நைமித்தியங்களைச் சரிவர நடாத்துவதற்கேற்ற தர்ம சாதனங்களையும் ஆக்கி வைத்திருந்தார். 43 வருட காலம் கோவிலைத் திறம்பட நிர்வகித்து 13-12-1825இல் குமாரசாமிக் குருக்கள் சொக்கநாதையருக்குக் கையளித்தார்.

கோவிலுக்கு வரும் மக்களின் நன்மையின் பொருட்டு 1830இல் கோவிலின் கிழக்கு மேற்கு வாசல்களுக்கு அண்மையில் இரு கேணிகளை இறங்கூன் பண்டாரம் என்பவரின் உதவியுடன் அமைப்பித்தார். 25 வருட காலம் எவரும் குறை கூறாத வண்ணம் கோவிலை நிர்வகித்து 27-12-1850இல் தனது மூத்த குமாரரான சபாபதிக் குருக்களிடம் கோவில் பொறுப்பதிகாரங்களை ஒப்படைத்தார்.

சபாபதிக் குருக்கள் சுறுசுறுப்பு-ம் கல்வி ஞானமும் கொண்டிருந்ததால் பலரது பாராட்டையும் பெற்றிருந்தார். கோவில் திருப்பணி வேலைகள் பூர்த்தியாகி இருந்ததால் சமய வளர்ச்சியில் அதிகம் ஈடுபட்டுக் கோவில் வீதியில் சமய வளர்ச்சிக்கான பிரசங்கங்களை நடாத்தியதுடன், சமய வகுப்புகளையும் நடாத்தி வந்தார். கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாற்றப்பட்டசைவர்கள் பலருக்குச் சிவதீட்சை வைத்து மீண்டும் சைவராக்கினார். இவரது காலத்தில் கோயில் சுற்றாடல் சைவ கலாசாரத்தோடு மிளர்ந்தமையால் யாத்திரிகள் பெருமளவில் வரத் தொடங்கினர். இதனால் வீதியோரங்களில் பல தர்ம மடங்களையும் கட்டுவித்தார். தனது பேரன் சுப்பிரமணியசர்மா பராயமடைந்ததும் அவரே கோவிலின் நிர்வாகப் பொறுப்புக்களையும் ஏற்று நடத்தவேண்டு

மென உறுதி மூலம் தீர்மானித்து 27-12-1875இல் தனது மகள் வேதநாயகியிடமும் மருமகன் சாமிக் குருக்களிடத்தும் பொறுப்பை ஒப்படைத்தார். சுப்பிரமணியசர்மா (இரத்தினக் குருக்கள்) பராயமடைந்து 6-9-1897இல் பொறுப்பேற்று நிர்வாகத்தை திறம்பட நடாத்தினார்.


மகோற்வசத்தின் பொருட்டுச் சுவாமி கீரிமலைக்குத் தீர்த்தமாடப்போகும் பொழுது ஏற்படும் சிரமத்தை நீக்குவதற்காக ஒற்றையடிப் பாதையாக இருந்த மாவிட்டபுரம் - கீரிமலை வீதியை அரசின் உதவியுடன் கல்பதித்த வீதியாகச் செப்பனிடுவித்தார். கோவிலின் மூன்றாம் வீதியைச் செப்பனிடுவித்து பஞ்சரதம் ஓடவல்ல பரந்துவிரிந்த வீதியாக்குவித்தார். 1915ம் ஆண்டில் பரிவார மூர்த்திகளாகச் சந்தான கோபாலர், நவக்கிரகம் ஆகியன அமைக்கப்பட்டதன் மூலம் கோவில் விஸ்தரிக்கப்பட்டது. இதே வருடத்தில் கோவிலின் மேற்கு வாசலில் இராசகோபுரத்திற்கான அத்திவாரமிடப் பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. வெள்ளி அங்கிகள், வெள்ளி சோடோபசாரங்கள், தங்க ஆபரணங்கள், குடங்கள், வெள்ளி மயில்வாகனம் ஆகியவற்றையும் விதிகளிற் கூறப்பட்ட பிரகாரம் அவ்வவ் உற்சவாதிகளுக்குரிய வாகனங்கள் போன்ற வற்றையும் திறமையான கலைஞர்களைக் கொண்டு ஆக்குவித்தார். முருகப் பெருமானுக்குத் தங்க முடியிட விரும்பிய பொழுது குரும்பசிட்டி ந.சின்னத்தம்பி என்பவரின் உபயமாக உருவாக்குவிக்கப்பட்டது. பின்னர் அவருடைய காலத்திலேயே களவாடப்பட்டு விட்டதாக அறியமுடிகின்றது.

கோயிற் பரிபாலனத்தில் நிர்வாகப் பரவலாக்கல் இவரின் காலத்தில் இடம் பெற்றது. ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற ஒவ்வொருவரைப் பொறுப்பாக அமர்த்தினார். தமது முன்னோர் காலத்தில் எவ்வாறு பரம்பரையாகத் தொழில்கள் நடைபெற்றதோ அவ்வாறே நடைபெற விரும்பி அதற்கான ஒழுங்குத் திட்டங்களையும் செய்து வைத்தார். தினசரி பூசைக்கு மேளவாத்தியம், பூமாலை கட்டுதல், வெள்ளை கட்டுதல், சங்கூதுதல் போன்றவற்றிற்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

1927இல் அமராவதி ஸ்தபதியால் கர்ப்பக்கிரகமும், அர்த்த மண்டபமும், மகா மண்டபமும், கருங்கற் திருப்பணி வேலையாக மாற்றியமைக்கப்பட்டு ஆனி சுவாதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் இடம் பெற்றது. அப்பொழுது கொடிஸ்தம்பத்தின் அரைப்பகுதி வெள்ளியினால் சங்கரன் செட்டி என்பவரின் உபயமாக அமைத்துக் கொடுக்கப்பட்டது. 1934இல் அசையாமணி உருக்கப்பட்டுத் திரும்ப வார்க்கப்பட்டுக் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இது இன்றும் உள்ளது. ''வள்ளித் திருமணம்'' என்னும் நாடகம் நடத்திப் பெற்ற நிதியைக் கொண்டு கோவில் மின் விளக்குகளினால் ஒளியேற்றப் பட்டது. 46 வருட கால நிர்வாகத்தின் பின் 28-11-1943இல் தனது மகன் துரைசாமிக் குருக்களுக்கு நிர்வாகப் பொறுப்பைக் கையளித்தார்.

தந்தையின் திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து மேற்கொண்ட இவர் 1954ம் ஆண்டு கொடிஸ்தம்பத்தின் மிகுதி அரைப் பங்கையும் தம்பு கனகரத்தினம் கதிர்காமத் தம்பி உபயமாகப் பெற்று வெள்ளிக் கொடிஸ்தம்பமாக நிர்மாணிப்பித்தார். மேற்கு வாசலில் ஆரம்பிக்கப்பட்ட 74' உயரமும் 5 தளங்களையும் கொண்டமைந்த இராச கோபுரம் 1954இல் பூர்த்தியாக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. 1964ம் ஆண்டு காரைக்குடிப் பெரியசாமி ஸ்தபதியினால் சிதம்பரீஸ்வரி சமேத சிதம்பரரேஸ்வரரும், தண்டாயுதபாணியும் பரிவார மூர்த்திகளாகப் பிரதிட்டை பண்ணப்பட்டுக் கோவில் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. மக்கள் போற்றும் முறையில் 31 வருட காலம் நிர்வகித்தார்.

08-10-1974 அன்று ஏழாம் தலைமுறையினராகிய தற்பொழுதைய ஆதீனகர்த்தா சண்முகநாதக் குருக்கள் தந்தையிடமிருந்து நிர்வாகப் பொறுப்பை ஏற்றுத் தந்தையின் திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார். 06-07-1975 அன்று ''மாவைக்கந்தன் ஆலயத் திருப்பணிச் சபை'' அமைக்கப்பட்டு 200 அடி நீளமானதும் 36 தூண்களைக் கொண்டதும் உற்சவ காலங்களில் வள்ளி தேவசேனா சமேத சண்முகப் பெருமான், முத்துக்குமார சுவாமி, விநாயகர், மீனாட்சியம்மை சமேத சுந்தரேஸ்வரர், சண்டேஸ்வரர் ஆகிய ஐந்து உற்சவ மூர்த்திகளும் ஒருங்கே காட்சியளிக்கக்கூடிய உற்சவர் சபையைக் கொண்டதாகவும், சாளாகார விமான ஸ்தூபிகளைக் கொண்ட திருக்கோயில் அமைப்புடன் நிறுவப் பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டில் 54 அடி உயரம் 2



தளமும் கொண்டு ஸ்தூபியுடன் அமைந்த 1000 இறாத்தல் எடையுள்ள மணியையும் கொண்ட அசையாமணிக் கோபுரம் கட்டப்பட்டுள்ளது. இதனுடன் தற்பொழுது இருமணிக் கோபுரங்கள் இருக்கின்றன. கிழக்கு வாயலில் இராசகோபுரம் அமைப்பதற்கு அத்திவாரமிடப்பட்டு பட்டியல் வரை வெண்கற்களினாற் கட்டப்பட்டுத் தொடர்ந்து வேலைகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றது.

1987ஆம் ஆண்டு இடம்பெற்ற வன் செயல்கள் காரணமாக பெப்ருவரி, மார்ச் மாதங்களில் ''செல்லடி'', விமானத் தாக்குதல் காரணமாக வசந்த மண்டபம், சண்முகநடேசர், நடேசர் மண்டபம், கொடிஸ்தம்பக் கூரை, கிழக்குவாசல், கோவில் மடம் I, II, அன்னதானமடம் I, II, இராசகோபுரம் ஆகியன சேதமடைந்ததால் ரூ. 720,000/- நட்டம் ஏற்பட்டது.

ஆனியில் இலங்கை இராணுவம் கோவிலைக் கைப்பற்றியதால் கோவிற் பொருள்கள் அழிக்கப்பட்டதும் களவாடப்பட்டதுமாக ரூபா 169,255/- நட்டம் ஏற்பட்டது. ஆதீனகர்த்தாவின் வீடும் பொருள்களுமாக ரூபா 117,435/- நட்டமும் தேர்களுக்கான அலங்காரப் பொருள்கள் ரூபா 101,448/- நட்டமும் ஏற்பட்டது. இதனுடன் 1987இல் துரதிஷ்ட வசமாக துவஜாரோகணம் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆடி தொடங்கி கோவில் திருத்த வேலைகள் ஓரளவிற்கு மேற்கொள்ளப்பட்டு பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

அதிகாரம் ஒரேயிடத்தில் குவிந்திருக்காமல் ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாளர்களை நியமித்து, அவர்கள் மூலம் வேலைகள் நடைபெற்றக் கொண்டிருக்க ஆதீனகர்த்தா அவர்கள் மேற்பார்வையாளர் போலக் கடமையாற்றுவதிலிருந்து முன்னரிலும் பார்க்க நிர்வாகப் பரவலாக்கல் இடம்பெற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்குச் சிறந்த உதாரணமாகத் திருப்பணி வேலைகளைச் செய்விப்பதற்கு திருப்பணிச் சபையை உருவாக்கியதும் கோவில் வரவு செலவுகளை கவனிப்பதற்கு கணக்கப்பிள்ளை ஒருவரை நியமித்திருப்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

### *நிர்வாகம்*

ஆரம்பகாலந் தொட்டுத் தனியுரிமையாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் கோவில் ஆதீனகர்த்தாக்களாகவும், பூசகர்களாகவும் விளங்குகின்றார்கள். தந்தை வழி மரபு முறையாக முதல் தாரத்து மூத்த புத்திரருக்கு ஆதீன நிர்வாக உரிமை செல்கின்றது. இதில் இன்றுவரை எவ்வித மாற்றமும் இன்றி நடைபெறுகின்றது. 1954ஆம் ஆண்டில் 16608ஆம் இலக்கக் கோட்டுத் தீர்வையின்படி தனியுடமையாக இருக்கின்றது.

### *மூர்த்தி தலம் தீர்த்த விசேடம்*

கோயிற் கடவை என்ற பெரும் குறிச்சியில் ஜமதக்கினி (நகுலமுனிவரின்) சாபம் நீங்கியமையால் கீரிமலை (நகுலேஸ்வரம்) என்றும்; மாருதப்புர வல்லியின் குதிரைமுகம் நீங்கப் பெற்றமையால் மாவிட்டபுரம் என்றும்; காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கியமையால் காங்கேசன்துறை எனவும் சிறப்புப் பெறலாயிற்று. கோவிலை நடுநாயகமாகவைத்து 5 மைல் சுற்றுப் பிரகாரத்திலுள்ள அடியார்களது இஷ்ட சித்திகளைக் குறிப்பாக விவாக காரியங்கள், புத்திரப் பேறுகள், நோய் நீங்கல் ஆதியாம் காமிய சித்திகளைத் தீர்த்ததினால் ஒரு மகத்துவம் ஏற்பட்டது. அடியால் பெருமக்கள் நாம கரணம், கர்னவேதனம், வித்தியாரம்பம், அன்னப்பிராசனம், விவாகம், மாவிளக்கேற்றல், காவடி எடுத்தல், அங்கப் பிரதிட்டைகள் ஆதியாம் துறைகளில் கந்த சுவாமியாரது திருவருட்டுணையுடன் கோவிலில் நடப்பிப்பதால், அதனால் ஏற்பட்ட சித்திகளாலும் இங்கே மூர்த்தி விசேடம் பரவலாகியது. வீதிகளின் மடங்களில் தங்கிநின்று தமது நோய் துன்பங்களைத் தீர்ப்பதிலும் மூர்த்தி விசேடம் காணப்படுகின்றது.

பழைய ஏட்டுப் பத்ததிகளின் பிரகாரம் குமாரதந்திர விதிப்படி முறை தவறாது பூசைகள் ஆராதனைகள் உற்சவங்கள் இடம்பெறுவதால் ஓர் தல விசேடம் இயற்கையாகவே இங்கு அமைந்து விட்டது. பூசகர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருப்பது போல மாலைகட்டுபவர்கள், இசையாளர்கள், அலங்காரம் செய்யும் கட்டாடிமார்கள், மரவேலை செய்யும் ஆசாரிமார்கள் ஒரே பரம்பரைக் கட்டுப்பாட்டின் கீழ்த் தொழில் செய்கின்றார்கள். மூன்று திருவீதிகளைக் கொண்டதாலும், முதன் முதல் கொடியேற்றத் திருவிழாவை ஆரம்பித்ததாலும், முதன் முதலாகப் பஞ்ச ரதங்களை ஓட விட்டதாலும் முதன் முதலாக 5 தளம் கொண்ட இராசகோபுரத்தை நிர்மாணித்ததாலும், உற்சவ காலங்களில் நாட்டியம், நாடகம், கதாப்பிரசங்கம், பூஞ்சப்பறம், நீண்டுயர்ந்த பெரிய சப்பறம் இருந்ததினாலும் இயல்பாகவே அடியார்களைத் தம்வசம் ஈர்க்கக்கூடிய ஓர் விசேடத்தை இக்கோவில் கொண்டிருப்பது தல விசேடமாகக் கருதப்படுகின்றது.

மகா சிவராத்திரி, ஆடியமாவாசை, மாசி மகம் ஆதியாம் தினங்களில் கீரிமலையில் பார்வதி பரமேஸ்வரனாய் உருவகம் செய்யப்பட்ட கண்டகி சமுத்திர தீர்த்தம் இக் கோயிலுக்குத் தீர்த்த மானியமாக இருக்கிறது. இதைவிடக் கோயிலுட் பிரகாரம் திருமஞ்சனத் தீர்த்தமும் ஓர் விசேடத் தன்மை கொண்டுள்ளது.

நன்றி

காஞ்சிமாவடி வைகும் செவ்வேள்

*அருள் ஒளி, ஆடி மாத மலர் - 2013*

# யுகங்களைக் கடந்த
# ஏக புஷ்பம்

திருத்தியமலை

அங்கிங்கெனாதபடி எங்கும் வீற்றிருந்து, தம்மை நாடிவரும் அடியார்கள் குறைகளைத் தீர்ப்பவன் பொன்னார் மேனியனான சிவபெருமான். அவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அவற்றில் ஒரு நாமம் 'ஏகபுஷ்பப் பிரியநாதன்'. இந்தத் திருப்பெயரோடே ஈசன் அமர்ந்து அருளும் தலமே திருத்தியமலை. இதன் பழைய பெயர் திருத்தேசமலை. தரை மட்டத்திலிருந்து சுமார் 200 மீட்டர் உயரத்தில் உள்ளதுதான் திருத்தியமலை. இது சிறு குன்று. தலைக்காவிரியில் இருந்து இந்த திருத்தியமலைக்கு வந்து ஏகபுஷ்பப் பிரியநாதரையும் தாயினும் நல்லாளையும் தரிசித்து வழிபட்டனராம் அகத்திய முனிவரும் அவர் மனைவி லோபாமுத்திரையும். திருமணத்தடை, கல்வித்தடை, மணமக்களிடையே ஏற்படும் பிரச்னைகள் முதலான எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து அருள்கிறாள், தாயினும் நல்லாள். ஆறு வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு அர்ச்சனை செய்து வழிபட்டால் போதும். சூரியனைக் கண்ட பனிபோல தடைகள் தானே விலகும்.

படியேறிச் சென்றால் தெய்வானையுடன் அழகன் சுப்பிரமணியர் காட்சி தருகிறார். இவர் சத்ருகளை அழித்துக் காப்பாற்றுபவர். நீதிமன்ற வழக்குகளில் வெற்றிபெற இவரை சரணாகதி அடையலாம். செவ்வாய், சஷ்டிகளில் இவரை தரிசித்தால் சத்ருகளால் வரும் தொந்தரவுகள் நீங்கும்.அதிகார நந்தி, அம்பாளுக்கும் இறைவனுக்கும் இடையில் அமர்ந்தவாறு சுவரில் உள்ள துவாரம் மூலம் இறைவனை தரிசிக்கிறது. இத்திருக்கோயில் ராஜராஜ சோழனின் மகன் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. ஏகபுஷ்பப் பிரியநாதர் என்ற பெயர் இந்த இறைவனுக்கு ஏன் வந்தது? அதற்குச் சுவையான வரலாறு ஒன்று காலங் காலமாய் கூறப்பட்டு வருகிறது.

இறைவனால் படைக்கப்பட்ட மலர்கள் எத்தனையோ உள்ளன. அவற்றுள் சில இறைவனுக்குச் சாத்தப்படுகின்றன. ஆனால், ஒரு மலரை இறைவனே காத்திருந்து ஏற்றுக் கொள்வதாக கூறப்படுகிறது. அந்த மலர் தான் 'தேவ அர்க்கய வள்ளிப்பூ'. இது எங்கே பூக்கிறது? மரத்திலா? செடியிலா? கொடியிலா? இல்லை. ஒரு சுனையில் பல யுகங்களுக்கு ஒரே முறை பூக்கும்! இந்தச் சிறப்பு மிக்க சுனை அமைந்திருக்கும் இடம்தான் திருத்தேசமலை. சுனையில் வற்றாத நீர் உள்ளது. இப்பூவை அணிந்து மகிழ்வதற்காக யுக யுகாந்திரமாய் காத்திருப்பதால், இந்த சிவபெருமானின் திருப்பெயர், ஏகபுஷ்பப் பிரியநாதர். இந்தப்பூ மலர்ந்து இறைவனிடம் சேர்வதைப் பார்க்க விரும்பினார், பிருங்கி முனிவர். அந்த அருமையான நேரத்தை நோக்கி தவமிருந்தார். இந்த மலையில் பல கிளிகள் இருந்தன. அவற்றுக்கு இப்பூ பூக்கும் நேரமும் காலமும் தெரியும். அந்த விவரத்தை அவை தமக்கிடையே பேசிக்கொள்வதை பிருங்கி முனிவர் கவனித்தார். விவரமும் புரிந்துகொண்டார். அப்போதிலிருந்து அந்தக் கிளிகளையும் கவனித்து வந்தார். அந்தப் புனிதமான நேரமும் வந்தது. சுனையில் தோன்றிய சங்கு போன்ற தேவ அர்க்கய வள்ளிப்பூ மெல்ல நகர்ந்து போய் ஏகபுஷ்பப் பிரியநாதரின் சிரசில் அமர்ந்தது. இவ்வரிய காட்சியைக் கண்ட பிருங்கி முனிவர் ஆனந்தக் கூத்தாடினார்.

அவரையும் கிளிகளையும் தன்னடி சேர்த்தருள் செய்தார் இறைவன். இந்தக் கோயிலில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சிவலிங்கத்திற்கு வில்வத்தாலும் ஆவுடையாருக்கு துளசியாலும் அர்ச்சனை செய்யப்படுகிறது. கிளிகளோடு பிருங்கி முனிவர், அக்த்தியர்-லோபாமுத்ரா போற்றி வணங்கிய ஏகபுஷ்பப் பிரியநாதரையும் தாயின் நல்லாளையும் நாமும் தரிசித்து நற்ப லன் பெறுவோம். இத்தலம் திருச்சி-துறையூர் பேருந்துப் பாதையில் திருப்பைஞ்சீலியிலிருந்து 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. •

**நன்றி.....நன்றி......நன்றி**

கடந்த மூன்று இதழ்களுக்கும் விளம்பரம் தந்து உதவிய கோவில்கள்

1. ஆர்ச்வே முருகன் கோவில்
2. கனக துர்க்கையம்மன் கோவில்
3. கற்பகப் பிள்ளையார் கோவில் (வால்தம்ஸ்ரோ)
4. திருத்தணிகை வேல்முருகன் ஆலயம்

# அருள்மிகு உத்தவேதீஸ்வரர் திருக்கோயில்

## தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று

| | | |
|---|---|---|
| மூலவர் | : | உத்தவேதீஸ்வரர் |
| உற்சவர் | : | - |
| அம்மன், தாயார் | : | அரும்பன்ன வனமுலைநாயகி |
| தல விருட்சம் | : | உத்தாலமரம் |
| தீர்த்தம் | : | பதும, சுந்தர, காவிரி தீர்த்தங்கள் |
| ஆகமம், பூஜை | : | காரண, காமீகம் |
| பழமை | : | 1000-2000 வருடங்களுக்கு முன் |
| புராண பெயர் | : | திருத்துருத்தி, குற்றாலம் |
| ஊர் | : | குத்தாலம் |
| மாவட்டம் | : | நாகப்பட்டினம் |
| மாநிலம் | : | தமிழ்நாடு |

பாடியவர்கள்

தேவாரப்பதிகம்

திருஞானசம்பந்தர்

கங்குல் கொண்ட திங்களோடு கங்கைதங்கு
செஞ்சடைச் சங்கிலங்கு வெண்குழை சரிந்திலங்கு
காதினாய் பொங்கிலங்கு பூணநூ லுருத்திரா துருத்திபுக்
கெங்குநின் னிடங்களா வடங்கி வாழ்வ தென்கொலோ.

-திருஞானசம்பந்தர்


தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இது 37வது தலம்.

திருவிழா

மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம், கார்த்திகை ஞாயிறு.

தல சிறப்பு

இத்தல இறைவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.



சிவபெருமான் இத்தலத்தில் திருமணம் செய்ததற்கு அடையாளமாக, தான் அணிந்து வந்த பாதுகைகளையும், கைலாயத்திலிருந்து தொடர்ந்து நிழல் தந்து வந்த உத்தால மரத்தையும் இங்கு விட்டு சென்றார். சிவனது பாதுகைகளை நாம் இப்போது சென்றாலும் தரிசிக்கலாம்.

**திறக்கும் நேரம்**

காலை 6 மணி முதல் 11 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

**முகவரி**

அருள்மிகு அரும்பன்ன வனமுலைநாயகி உடனுறை உத்தவேதீஸ்வரர் திருக்கோயில்

குத்தாலம் (திருத்துருத்தி) - 609 801

நாகபட்டினம் மாவட்டம்.

**பொது தகவல்**

இங்கு பார்வதி, காளி ஆகியோரும், காசிபன், ஆங்கீரசன், கவுதமன், மார்க்கண்டேயர், வசிஷ்டர், புலஸ்தியர், அகஸ்தியர் ஆகிய சப்த ரிஷிகளும் இத்தலத்தில் பேறு பெற்றுள்ளனர்.

**பிரார்த்தனை**

திருமணத்தில் தடை உள்ளவர்கள் வழிபட வேண்டிய தலம்.

**நேர்த்திக்கடன்**

பிரார்த்தனை நிறைவேறியதும் சிவனுக்கும் அம்மனுக்கும் அபிஷேகம் செய்து, புது வஸ்திரம் சாத்தி வழிபாடு செய்கிறார்கள்.

**தலபெருமை**

*பாம்பாட்டியாக வந்த சிவன்:* உருத்திரசன்மன் என்பவன் முக்தி பெற காசிக்கு சென்றான். இத்தலமும் காசிக்கு சமம் தான் என்பதை உணர்த்த சிவன், குண்டோதரனை அழைத்து நீ பாம்பு வடிவம் எடுத்து உருத்திரசன்மன் காசிக்கு செல்ல விடாமல் தடுத்து விடு என்று கூறினார். அதன்படி பாம்பு இவனை தடுக்க, உருத்திரசன்மன் கருட மந்திரத்தை உச்சரிக்க பாம்பு மயங்கி கீழே விழுந்தது. பாம்பை காப்பாற்ற சிவன் பாம்பாட்டி வடிவம் எடுத்தார். பாம்பாட்டியாக வந்திருப்பது சிவன் என்பதை அறிந்து அவன் வணங்க, இத்தலத்தை தரிசித்தாலே காசியில் தரிசித்த புண்ணியம் கிடைக்கும், என்று கூறினார்.

மூலவர் - உக்தவேதீஸ்வரர் என்ற சொன்னவர் அறிவார். அம்மன் - அரும்பன்ன வனமுலையம்மன். இறைவனே இங்கு திருமணம் நடத்தியதால் எப்பேர்ப்பட்ட திருமண தடையும் நீங்கிவிடும். தன்னால் தீண்டப்படும் பொருள்கள் எல்லாம் அழிந்ததால் வருத்தமடைந்த அக்னி இங்கு வந்துதான் தன் குறையை போக்கி அனைவருக்கும் பயனுள்ளவன் ஆனான்.

**தல வரலாறு:**

காதல் புரிந்தோம் என்பதற்காக பெற்றவர்களைப் பகைத்துக் கொண்டு காவல்நிலையம் பக்கம் செல்லும் இளசுகள் அதிகரித்து வருகிறார்கள். அன்னை பார்வதி இப்பூமியில் மானிட ஜென்மமாய் அவதரித்து, சிவன் மீது காதல் கொண்டாலும் கூட, பெற்றவரிடம் முறைப்படி பெண் கேட்டு அழைத்துச் செல்லும் படி இறைவனிடம் கேட்டாள். நற்குணமுடைய இறைவன் அழைத்தே பெற்றவர்களுக்கு மரியாதை கொடுத்த பார்வதி போல, காதலிகள் தங்கள் காதலர் கரம்பிடிக்கும் முன் போராடியேனும் பெற்றோர் சம்மதம் பெற முயற்சிக்க வேண்டும். பரதமாமுனிவர் பார்வதியே தனக்கு மகளாக பிறக்க வேண்டும் என கடும் தவம் இருக்கிறார்.

இவரது வேண்டுகோளை ஏற்ற இறைவன் வேள்விக் குண்டத்தில் பார்வதியைப் பிறக்கச் செய்தார். பார்வதியும் பெரியவளாகிறாள். இவளது ஒரே விருப்பம் சிவனைத் தன் கணவனாக அடைவது என்பது தான். காவிரிக்கரையில் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து வந்தாள்.

எட்டாவது நாள் வழிபாடு செய்ய வந்த போது அவ்விடத்தில் ஒரு லிங்கம் இருக்கக்கண்டு, சிவனே அவ்வாறு எழுந்தருளியதாகக் கருதி மகிழ்ந்தாள். சிவனும் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு பார்வதியின் கையை பற்றி அழைத்தார். ஆனாலும், பார்வதி சிவனுடன் செல்லாமல் இறைவனே! என்னை வளர்த்த பெற்றோர்கள் மகிழ்ச்சியடையும் படி அவர்கள் சம்மதத்துடன் என்னைத் திருமணம் செய்யுங்கள்'' என்று கூற ஈசனும் சென்று விட்டார். சில காலம் கழித்து நந்தியை, பரதமாமுனிவரிடம் மணம் பேசி வர தூது அனுப்பி வைக்கிறார் சிவன். முனிவரும் சம்மதிக்க மண நாள் குறிக்கப்பட்டது. கைலாயத்திலிருந்து மணமகனாக ரிஷப வாகனத்தில் சிவன் வர, விநாயகர் முன்னே செல்ல, உத்தாலம் என்னும் மரமும் சிவனுக்கு நிழல் தந்து கொண்டே வந்தது. மணமகள் இருப்பிடமான குத்தாலம் வந்து பெற்றோர் சம்மதத்துடன் பார்வதியை பரமேஸ்வரன் திருமணம் செய்து கொண்டார்.

சிவன் தான் இங்கு வந்து திருமணம் செய்ததற்கு அடையாளமாக தான் அணிந்து வந்த பாதுகைகளையும், கைலாயத்திலிருந்து தொடர்ந்து நிழல் தந்து வந்த உத்தால மரத்தையும் விட்டு சென்றார். இதனால் தான் இத்தலம் குத்தாலம் எனப்பட்டது.

அதிசயத்தின் அடிப்படையில்: இத்தல இறைவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். சிவபெருமான் இத்தலத்தில் திருமணம் செய்ததற்கு அடையாளமாக, தான் அணிந்து வந்த பாதுகைகளையும், கைலாயத்திலிருந்து தொடர்ந்து நிழல் தந்து வந்த உத்தால மரத்தையும் இங்கு விட்டு சென்றார். சிவனது பாதுகைகளை நாம் இப்போது சென்றாலும் தரிசிக்கலாம். ●




# விட்டுக்கொடுப்பவர் கெட்டுப்போவதில்லை!

ஜைகீஷவ்யர் என்ற முனிவர் ஆசைகளை முழுமையாகத் துறந்தவர். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதுபவர். தனக்கு துன்பம் செய்பவர்களையும் மன்னிக்கும் அருங்குணம் கொண்டவர். கோபம் என்ற சொல்லையே அவர் அறிந்ததில்லை. இப்படிப்பட்ட மகா ஞானியை சிவபெருமானுக்கு மிகவும் பிடித்து போய் விட்டது. மாறுவேடத்தில் சிவலோகம் வந்து தன்னை எந்நேரமும் வந்து தரிசித்து செல்ல அனுமதி அளித்தார்.

ஒருமுறை, சிவபெருமானும், பார்வதிதேவியும் 'பொருள் என்றால் என்ன?' என்பது பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

சிவன் அவளிடம், ''இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருளும் நானே. நான் அசைந்தால் தான் இந்த அகிலம் அசையும், காற்று, கடல், வான், நெருப்பு, பூமி, மக்கள் எல்லாமே நான் தான்,'' என்றதும், பார்வதி கோபித்தாள்.

''சிவனாகிய தாங்கள் தான் ஜீவன் என்றால், சக்தியாகிய எனக்கு இங்கே என்ன வேலை? நான் பொருள் இல்லையா? இல்லை, தாங்கள் என்னை பொருட்படுத்தவே இல்லையா?'' என்றாள் சீற்றத்துடன்.

''தேவி! கோபிக்காதே! என்னுள் அடங்கிய பொருள்களில் நீயும் ஒருத்தி,'' என்றார் சிவன்.

அப்போது, ஒரு குரல் கேட்டது.

''சிவன் சொல்வதே உண்மை தேவி! சக்தி என்பது சிவம் என்னும் பொருளில் அடங்கி இருக்கும் ஒரு வஸ்து. சிவத்தினாலேயே சக்திக்கு மதிப்பு. உயிரின்றி சக்தி செயல்படாது,'' என்றார்.

பார்வதியால் குரலைத் தான் கேட்க முடிந்ததே தவிர, அது யாரென்று அறிந்து கொள்ள முடியவில்லை.

''லோகநாதரே! நம் பேச்சினூடே குறுக்கிட்டவர் யார்? என்னைப் பற்றி விமர்சிக்க அவருக்கு என்ன துணிச்சல்! மனைவியை ஒருவன் விமர்சிக்கும் போது, நீங்களும் அமைதியாக இருந்தீர்களே! சொல்லுங்கள், அது யாரென்று?'' என்று கொந்தளித்தாள்.

சிவன் அவளிடம்''அன்பே! கோபம் கொள்ளாதே. அவர் எனது பக்தர். சிறந்த தபஸ்வி. அவருக்கு ஆசை என்பதே இல்லை. என் பக்தனாயிருப்பதற்குரிய அனைத்து தகுதிகளும் அவரிடம் உள்ளன. என்னை தரிசிக்க அடிக்கடி வருவார். இப்போது அவர் இங்கு இல்லை. உனக்குரிய பதிலைச் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார். அவரை நான் தண்டிக்க இயலாது,'' என்று பதிலளித்தார்.

''அப்படியா! அந்த முனிவர் ஆசையற்றவர் என்பதை பரிசோதிக்க விரும்புகிறேன், கிளம்புங்கள்,'' என்றாள் பார்வதி. இருவரும் ரிஷப வாகனத்தில் அவரது இருப்பிடம் வந்தனர். அப்போது, முனிவர் எளிய ஆடையுடன் இருந்தார். இன்னொரு ஆடை கந்தலாய் இருந்தது. அதைத் தைக்க முனிவர் ஊசியில் நூல் கோர்க்க முயன்று கொண்டிருந்தார். சிவபெருமான் மட்டும் அவர் முன் காட்சி தந்தார்.

''முனிவரே! உமக்கு ஏதாவது தர வேண்டுமென விரும்புகிறேன். கேளும்,'' என்றார்.

''ஐயனே! நான் மிகுந்த திருப்தியுடன் இருக்கிறேன். எதெல்லாம் எனக்கு தேவையென நினைக்கிறேனோ அவையெல்லாம் தந்து விட்டீர். வேறு எதுவும் தேவையில்லை,'' .

''தபஸ்வியே! நீர் வேறு நான் வேறு அல்ல, என்ன வேண்டுமானாலும் கேளும்,'' என்று ஆசையைத் தூண்டினார் சிவன்.

ஜைகீஷவ்ய முனிவர் மயங்கவில்லை.

''சரி...இந்த ஊசியில் நூலைக் கோர்த்து தந்து விட்டு கிளம்புங்கள்,'' என்றார். ஆசையே இல்லாத அவரைப் பார்த்து மறைந்திருந்த பார்வதி வெளிப்பட்டாள்.

''முனிவரே! தங்களுக்கு எந்த வித ஆசையுமில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். உங்களைப் போன்றவர்கள் தெய்வங்களுக்கும் அறிவுரை சொல்லத் தகுதியானவர்கள் தான். சிவத்துக்குள் அடங்கிய பொருளே சக்தி என்பதை ஒப்புக்கொள்கிறேன்,'' என்று அவரை வாழ்த்தி விட்டு கிளம்பினாள்.

பங்குனி உத்திரத்திருநாள் சிவபார்வதி திருமண நாளாகக் கருதப்படுகிறது. கணவனுக்குள் மனைவி அடக்கம் என்பதை பார்வதிதேவி உலகுக்கு உணர்த்தியது போல, தம்பதியர் அனைவரும், விட்டுக்கொடுத்து ஒற்றுமையுடன் வாழ உறுதியெடுக்க வேண்டும். ●

## சைவசித்தாந்த வினாடி வினா

முதல் பகுதி - பொதுச் செய்திகள்

1. சித்தாந்தம் என்ற சொல்லின் பொருள் என்ன?
   முடிந்த முடிபு
2. முதன் முதலில் தமிழ் மொழியில் சித்தாந்தம் என்னும் சொல்லைக் கையாண்டவர் யார்?
   திருமூலர்
3. சைவசித்தாந்தம் என்னும் தொடரைக் கையாண்ட ஆகமங்களில் ஏதேனும் ஒன்றைக் கூறுக.
   காமிக ஆகமம்
4. சைவசமயத்தின் இலக்கியக் கருவூலம் என்று கூறப்படுவன யாவை?
   பன்னிரு திருமுறைகள்
5. சைவசித்தாந்த கோட்பாடுகள் இடம் பெற்ற பழந்தமிழ்நூல் யாது?
   திருக்குறள்
6. சைவ சமயக்குரவர் நால்வர் யார்?
   ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர்
7. சம்பந்தர் முதலிய மூவர் அருளியது யாது?
   தேவாரம்
8. மணிவாசகர் அருளியது யாது?
   திருவாசகம்

*சிவனேன்னு இருக்கேன் என்று பலரும் சொல்கிறார்களே.. ஏன்?*

நான் சிவனேன்னு இருக்கேன். என்னை ஏன் வம்புக்கு இழுக்கிறீங்க? என்று சொல்வதைத் தானே குறிப்பிடுகிறீர்கள். அமைதியாக இருப்பவனை ஏன் பிரச்னைக்கு உள்ளாக்குகிறீர்கள் என்பது இதன் பொருள். எப்போதும் சிவகதியில் லயித்திருக்கும் சிவயோகிகள் சிவனை மட்டுமே மனதில் இருத்தி தியானத்தில் இருப்பர். தூங்கும் போது, சாப்பிடும் போது கூட சிவசிந்தனை தான். இதை சிவோஹம் பாவனை என்பர்.

## ஆலயங்களில் செய்யக் கூடாதவை எவை?

1. ஒரு பிரதட்சணம், ஒரு நமஸ்காரம்.
2. உடம்பைப் போர்த்திக்கொண்டு பிரதட்சணம், நமஸ்காரம் செய்தல். (பெண்கள் இதற்கு விதிவிலக்கு)
3. தனித்தனியாக ஒவ்வொரு தெய்வத்தையும் நமஸ்கரித்தல்.
4. பிரசாதத்தைத் தவிர வேறு உணவு வகைகளை கோவிலுக்குள் சாப்பிடக்கூடாது.
5. வீட்டு விலக்கு, சாவுத்தீட்டு போன்ற அசுத்த நிலையில் செல்லக்கூடாது.
6. கண்டகண்ட இடத்தில் கற்பூரம் ஏற்றக் கூடாது. விக்கிரங்களைத் தொட்டு வணங்கவே கூடாது.
7. கர்ப்ப கிரகத்தினுள் நமஸ்காரம் செய்யக்கூடாது.
8. கொடி மரம், நந்தி, பலி பீடம் இவைகளுக்கு குறுக்காகச் சென்று பிரதட்சணம் செய்யக்கூடாது.
9. தெற்கு முகமாக நமஸ்காரம் செய்யக்கூடாது.
10. தலைக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டோ, ஈரஆடையுடன் கூடவோ தெய்வ வழிபாடு செய்யக்கூடாது.
11. ஆலயத்தினுள், படுத்து உறங்குதல், அரட்டை அடித்தல், உரக்க சிரித்தல், அழுதல், தாம்பூலம் தரித்தல் போன்ற காரியங்களைச் செய்யக்கூடாது.
12. பொய் பேசுதல், மற்றவர்களை நிந்தித்தல், பெண்களிடம் தகாத முறையில் நடத்தல் போன்றவை கூடாது.
13. ஆலயத்தினுள் மனிதர்கள் யாருக்குமே நமஸ்காரம் செய்யக் கூடாது. ஆலயம், இறைவனுடைய இல்லம். இங்கு செய்யப்படும் மரியாதைகள் அனைத்தும் அவனுக்கு மட்டுமே உரியன.
14. ஆலயத்தின் உள்ளும், புறமும், மல ஜலம் மற்றும் சிறுநீர் கழிப்பது மகா பாவம்.
15. காலணிகள், தோல் பை மற்றும் மிருகத் தோலாலான எந்த பொருளுடனும் ஆலயத்தினுள் நுழையக் கூடாது.
16. கோவில் மூடிய நிலையில் இருக்கும் போதும் சுவாமி வீதியில் உலா வரும் போதும் கோவிலினுள் சென்று தரிசனம் செய்ய முயற்சிக்கக்கூடாது.

# சிவக்கீரை

கும்பகோணம் மகாமக குளத்தின் அருகே மளிகைக்கடை நடத்தியவர் குமரேசன் செட்டியார். அவர் மனைவி சிவகாமி ஆச்சி. கணவனே கண்கண்ட தெய்வம் என்று வாழ்ந்து வந்தார். குழந்தையில்லாத அத்தம்பதியர் ஒருசிறுவனைத் தத்தெடுத்து வளர்த்தனர். சிவ சிவ என்ற நாமம் தவிர வேறு ஒன்றும் அறியாதவர் செட்டியார். அமர்ந்தாலும், எழுந்தாலும் சிவநாமத்தைச் சொல்லாமல் இருந்ததில்லை. கணவனும், மனைவியும் தங்கள் மாட்டு வண்டியில், தினமும் காவிரியாற்றில் நீராடி விட்டு, சிவன் கோயிலுக்கு சென்று வழிபடுவர். மேலும், சிவனடியார்களுக்கு அன்னமிடுவதை அன்றாடக்கடமையாகச் செய்து வந்தனர். அடியவர்களை வரவேற்று கால் கழுவி சந்தனம், குங்குமம் கொடுத்து சாப்பாடு கூடத்திற்கு அழைத்துச் செல்வது வழக்கம். வரும் அடியவருக்கு என்ன காய்கறி பிடிக்குமோ அதையே ஆச்சி சமைத்துப்போடுவார். இதற்காக வேலையாட்கள் யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. ஒருநாள் நல்ல மழை... வானம் மூடிக் கிடந்தது. வாசல் பக்கம் செட்டியார் எட்டிப்பார்த்தார். மழை பெய்ததால், அடியவர் ஒருவர் கூட அன்று வரவில்லை. செட்டியார் குடையை எடுத்துக் கொண்டு மகாமகக் குளக்கரைக்கு புறப்பட்டார். ஒரு மண்டபத்தில் சாமியார் ஒருவர், மேனி முழுவதும் திருநீறு பூசி,தேவாரம் பாடிக் கொண்டு இருந்தார். அவரை தங்கள் வீட்டுக்கு சாப்பிடும்படி அழைத்து வந்தார்.

ஆச்சி ஓடி வந்து, சாமியாரை வணங்கினார். சந்தனம், குங்குமம் கொடுத்து வரவேற்றார். அவரிடம், ஐயா! உங்களுக்கு எந்தக் காய் பிடிக்கும் என்று சொன்னால் எனக்கு சமையலைத் தொடங்க வசதியாக இருக்கும் என்றார். உடனே சாமியார் காய்கறி பயிரிட்டுஇருந்த இடத்தை நோக்கி வேகமாக நடந்தார். தம்பதியரும் பின்னே சென்றனர். அங்கே, நிறைய முளைக்கீரை வளர்ந்திருந்தது. கீரைத் தண்டு சாம்பாரும், முளைக் கீரை கூட்டும் கூட எனக்குப் போதும், என்றார் அவர். செட்டியாரும் தாமதிக்காமல் முளைக்கீரையைப் பறிக்க ஆரம்பித்தார். ஒருவர் மட்டும் பறித்தால் நேரமாகும் என எண்ணி, சாமியாரும் கீரையைப் பறித்து உதவி செய்தார். சமைக்கும் போது ஆச்சி, செட்டியார் பறித்த கீரையையும், சாமியார் பறித்த கீரையையும் தனித்தனியாக வேக வைக்கத் தொடங்கினார். சாமியார் பறித்த கீரையை தனியாக எடுத்துக் கொண்டு பூஜையறையில் சுவாமிக்கு நிவேதனம் செய்தார். இதைக் கண்டதும் சாமியாருக்கு பெருமை பிடிபடவில்லை. அடியவரான தன் கை பட்ட கீரைக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும் என்பதால், பூஜையில் வைத்துதருவதாக எண்ணிக் கொண்டார்.

சாப்பிட ஆரம்பித்ததும், ஆச்சியிடம் தன் சந்தேகத்தைக் கேட்டார். ஆச்சி அவரிடம், ஐயா! எனது கணவர் சிவநாமத்தைச் சொல்லிக் கொண்டே பறித்ததால் முளைக்கீரை சிவக்கீரை ஆகி விட்டது. அதனால், அதை பூஜையில் வைக்க வேண்டும் என்ற அவசியமில்லாமல் ஆகிவிட்டது. ஆனால், நீங்களோ அமைதியாகக் கீரையைப் பறித்து கொடுத்தீர்கள். அதனால், அதை சுவாமிக்கு நிவேதனம் செய்ய வேண்டியதாகி விட்டது, என்றார். இதைக் கேட்ட சாமியாருக்கு, தன் தலையில் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. அவர்களின் சிவபக்தியின் முன் தனது துறவறம் போலியானது என்று எண்ணி வெட்கிப் போய் விட்டார். ஒருமுறை சிவராத்திரியன்று அந்த தெய்வத்தம்பதியர் கும்பேஸ்வரரைத் தரிசித்துவிட்டு வீட்டிற்கு வந்தனர். பிரசாதத்தை எடுத்து வைத்துக் கொண்டிருந்த சிவகாமி ஆச்சி, பூஜை அறையிலேயே சிவசிவ என்ற சொல்லியபடியே உயிர் விட்டார். மனைவி மேல் உயிரையே வைத்திருந்த செட்டியாரும் சிவகாமி என்று கூவியபடியே சாய்ந்து கண்மூடினார். சிவராத்திரி நாளில் தம்பதியர் இருவரும் ஒரே நேரத்தில் சிவனடி சேர்ந்ததை எண்ணி அனைவரும் அதிசயித்து நின்றனர். 1938ல் கும்பகோணத்தில் வாழ்ந்த இத்தம்பதியர் செய்த அன்னதானத்தை காஞ்சிப்பெரியவர் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். ●

**பிரதோஷ விரதம் இருக்கிறீர்களா?**

பிரதோஷ விரதமிருக்கும் பக்தர்கள் மாலையில் சிவதரிசனம் செய்துவிட்டு சிவபுராணம் படிப்பது வழக்கம். அவர்களுக்கு ஒரு நிபந்தனையை பாடலின் கடைசியில் மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்வார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்பல்லோரும் ஏத்தப் பணிந்து என்பதே அது. நமச்சிவாய வாழ்க என்று முதல் வரியிலிருந்து பல்லோரும் ஏத்தப் பணிந்து என்பது வரை அர்த்தம் புரிந்து படிக்க வேண்டும். அப்படியானால் தான் நன்மை உண்டு என்கிறார். பிரதோஷ வேளையில் சிவபுராணத்தின் பொருளையும் அருளாளர்கள் மக்கள் மத்தியில் சொல்ல வேண்டும்.

# நாதனை மறைத்திடும் நவக்கிரகங்கள்



மு. நற்குணதயாளன்

நவக்கிரகங்கள் என்பவை அண்டத்தை வலம்வரும் கோள்கள். இவை சூரிய குடும்பத்தைச் சேர்ந்தவை. இந்தக் கோள்களின் இயல்பான ஈர்ப்பு சக்தியினால் பூமியிலுள்ள ஜீவராசிகளும் சடப்பொருள்களும் பாதிப்புகளுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளாகின்றன.

பூமியின் சில பகுதிகளில் நில நடுக்கம் உண்டாகிறது. காற்று சூறாவளியாகி பல அனர்த்தங்களை உண்டு பண்ணுகின்றது. ஆறுகளும் நதிகளும் பொங்கிப் பிரவாகித்து நாசம் விளைவிக்கின்றன. கடல் கொந்தளித்து பல நகரங்களையெ விழுங்கி விடுகின்றது. மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்பு உண்டாகி காட்டுத் தீ நாடு முழுவதும் பரவுகின்றது.

சும்மா இருந்த மனிதன் மன நோய் பிடித்து வீதிகளில் ஓடுகின்றான். சும்மா இருந்தவன் வாந்தி எடுத்து இறந்து விடுகின்றான். திடீரென்று மனிதனுடைய உடம்பு எதிர்பாராத அளவுக்கு வெப்பமடைந்து மடிகிறான். இவற்றுக்கெல்லாம் விஞ்ஞானம் எல்லாம் நடந்து முடிந்தபின்புதான் விளக்கமும் மருந்தும் தருகின்றது. சமயம் பல காரணங்களையும் நிவாரணங்களையும் கூறுகின்றது.

சனிமாற்றம் வியாழ மாற்றம் செவ்வாய் தோஷம் போன்றவற்றைக் கூறி மனிதனைப் பயம் கொள்ள வைக்கிறது சமயம். நவக்கிரங்களுக்குப் பூசை செய்தால் எல்லாவற்றிலிருந்தும் தப்பிவிடலாம் என்று சமயம் அறிவுரை கூறுகின்றது. இவ்வாறான சமய சிந்தனைகளுக்கு அப்பால் மனிதன் சிந்திப்பதில்லை. அவனைச் சிந்திக்க யாரும் அனுமதிப்பதில்லை.

இவையெல்லாம் சமயத்தை தங்கள் கைப் பொம்மைகளாக்கிக்கொண்ட பூர்வ மீமாம்சகர்களாகிய பிராமணர்களின் கைங்கரியம் என்பதை பொது மக்கள் யாரும் புரிந்து கொள்வதில்லை. கிரகங்கள் பூமியை வலம் வருகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றுகின்றது. இந்த இயக்கம் தொடர்ந்து ஓய்வில்லாமல் நடந்து கொண்டிருக்கின்றது. இதன்போது காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கிரகமும் பூமிக்கு அண்மையாக வருவதும் போவதுமாக உள்ளன. ஒவ்வொரு கிரகங்களும் தத்தமக்கென்று வெவ்வேறள வில் ஈர்ப்பு சக்திகளைக் கொண்டிருக்கின்றன. இந்த ஈர்ப்பு சக்திகளினால் பூமியிலுள்ள உயிர்களும் சடப்பொருள்களும் ஈர்க்கப் படுகின்றன. உலகம் பஞ்ச பூதங்களின் சேர்க்கையாகும்.

நமது உடலும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையே. காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கிரகமும் பூமிக்கு அண்மையில் வருவதாக வானிலை சம்பந்தப்பட்ட அறிவு சொல்கிறது. இவ்வாறு வரும் பொழுது இக்கிரகங்களின் ஈர்ப்பு சக்தி பூமியைப் பாதிக்கின்றது.

ஒரு ஹெலிகொப்டர் பூமியில் இறங்கும்போது எப்படி பூமியிலுள்ள பொருட்கள் அங்குமிங்கும் பறக்கின்றனவோ அதேபோல் கிரகம் ஒன்று வரும் போதும் நாம் எதிர்பாராத பல மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதுவே மறுக்கமுடியாத உண்மையாகும்.

இதனைத் தவிர்ப்பதற்கு (தவிர்க்க முடியாது) அந்தக் கிரகங்களை திட்டமிட்டுக் கடவுள்களாக்கி அவற்றிற்கு எள்ளெரிக்க வைத்து பணம் சம்பாதிக்கத் தொடங்கியது ஒரு கூட்டம்.

எமது உடம்பு நிலத்துக்கு சமமாகும். நிலத்தில் பயிர்கள் வளர்கின்றன அதே போல் எமது உடம்பில் மயிர்கள் வளர்கின்றன.

எமது உடம்பிலுள்ள மயிர்த்துளைத் துவாரங்களி னூடாக வியர்வையாக நீர் வெளியேறுகின்றது. கண்ணிலிருந்து கண்ணீர் வழிகின்றது. உடல் வெப்ப நிலையில் உள்ளது. காற்று எங்களது சுவாசம். ஆகாயம் கண்கள். இப்படி பஞ்ச பூதங்களின் சேர்க்கையாக உள்ள உடம்பு கிரங்களின் ஈர்ப்பு சக்தியினால் பாதிக்கப் படுவதும் ஆக்கிரமிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததே!

ஈர்ப்பு சக்தியினால் இரத்த அழுத்தங்களில் மாற்றங்கள் உருவாகும் உடம்பு அதிக வெப்ப நிலையை அடையும். எதிர்பாராதவிதமாக அந்தந்த கிரகங்களின் ஈர்ப்பு சக்திகளின் வலிமைக்கேற்ப உடலின் உள்ளே உள்ள உறுப்புகளின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படும். அதாவது மனிதர்கள் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிப்பர்.

மனிதர்களின் இந்த நிலைமைகளை தங்களுக்குச் சாதகமாப் பயன்படுத்திய பிராமணர்கள் சனிமுதற் கொண்ட ஒன்பது கிரகங்களையும் கடவுளராக்கி அவர்களை வழிபடச் செய்வதற்கான சட்ட திட்டங்களை யும் தம் மனம்போனபோகில் உருவாக்கினர்.

இவ்வாறு மனித சிந்தனைகளை மழுங்கடித்த இவர்கள் சனிக்கிரகத்தின் ஈர்ப்பு சக்தி பூமியில் அதிகமாக இருப்பதால் அதனை பிரதான பாதிப்புத் தரும் தெய்வமாக்கி அதற்கு சனீஸ்வரன் என்ற பெயரிட்டு

வைத்தனர். இதனை மக்கள் நம்பவேண்டுமென்பதற்காக சனீஸ்வரனால் எல்லாம் வல்ல சிவபெருமானே பாதிக்கப் பட்டார் என்று புராணவழிக் கதை ஒன்றையும் பரப்பிவிட்டனர். மக்களைப் பயங்காட்டி எள்ளெரிக்க வைப்பதில் அவர்கள் வெற்றி கொண்டார்கள் என்றே கூறவேண்டும்.

மக்களும் பயத்தின் மிகுதியால் பெருவாரியாகச் சென்று நவக்கிரகங்களை வழிபடத் தொடங்கினார்கள். இங்கே ஒரு விடயத்தை பக்தர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எள்ளெரிப்பதனால் சனிக்கிரகமோ அல்லது வேறு எந்தக் கிரகமோ பூமிக்கு அண்மையில் வருவதை தடுத்துவிட முடியாது எனபதாகும். ஆயின் எள்ளெரிப்ப தால் எமது துன்பத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாது என்பதே. ஆலயங்களில் சிவனை வழிபடும் நேரத்தை விட பக்தர்களை விட நவக்கிரகங்களை வழிபடும் நேரமும் பக்தர்களும் அதிகரிக்கத்தொடங்கினர். இவர்களின் துன்பங்கள் தீர்ந்ததோ என்னவோ ஆலயங்களின் பணவருவாய் அதிகரிக்கத் தொடங்கியது.

இறைவனைவிட நவக்கிரங்களுக்கு மக்கள் முக்கித்துவம் கொடுக்கத் தொடங்கினார்கள். இவற்றுக்கெதிராகக் குரல் கொடுத்தவர்கள் ஆகமத்துக்கு எதிரானவர்கள் என்றும் வேதத்தின் எதிரிகள் என்றும் பிராமணர்களால் குற்றம் சாட்டப்பட்டனர். சாதாரண பக்தர்கள் ஆகமம் என்பதைப் புரியாதவர்களாகவே உள்ளனர். இவர்கள் ஐயர் சொல்வதையே ஆகமம் என்று எண்ணி வாழுமளவுக்கு ஆறிவில் சூனியர்களாகவே இருந்தனர். ஆகமம் என்பது இறைவனை வழிபடுவதற் கான வழிமுறைகளை தன்னகத்தே கொண்டதாகும். ஆகமத்தில் இடையிலே உருவாக்கப்பட்ட தெய்வங்களைப் பற்றி எதுவுமே கூறப்பட்டில்லை. ஆ என்பது பாசத்தையும் க என்பது பசுவையும் ம என்பது பதியையும் குறிப்பதாகும். இது சைவ சித்தாந்தத்தை அடியொற்றியதே ஆகும்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் வேதங்கள் ஐயாவென ஓங்கி ஆழந்து அகன்ற நுண்ணியனே என்று கூறுகிறார். இறைவன் ஒருவரால் மட்டுமே எமது இன்னல்களைத் தீர்க்க முடியுமென்பதை ஒவ்வொரு வரும் உணர வேண்டும்.

இறைவனை வழிபட வழிபட எமது ஆன்ம பலம் அதிகரிக்கும். எமக்கு வருகின்ற பிரச்சினைகளை இல்லாதொழிக்க முடியாது. ஆன்ம பலத்தை அதிகரிப்பதன் மூலம் பிரச்சினைகளை தாங்கி கொள்ளும் வல்லமைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஆன்ம பலத்தை அதிகரிக்க நாம் இறைவனையே வணங்கவேண்டும் அவனைக் குறித்தே நாம் தியானம் செய்ய வேண்டும். பதிலாக நவக்கிரகங்களை வழிபடுவதால் இன்னும் நாம் பலவீனமாக்கப்படுவோம். நாங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு பலவீனமாக்கப் படுவோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எம்மை வைத்து மற்றவர்கள் பணம் பண்ணத் தொடங்கி விடுவார்கள்.

சனியை நாம் இறைவனின் அம்சமாகக் கொண்டே வழிபடுகின்றொம் என்ற வாதம் வைக்கப்பட்டாலும் இறைவனே இருக்கும்போது எதற்கு அவருடைய அம்சமாக இன்னோன்றை வழிபடவேண்டும்.

இந்த ஆன்ம பலத்தை அதிகரிப்பதற்காக திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் ஒன்றைப்பார்ப்போம்.

இரண்டாந் திருமுறையில்

*வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணை தடவி*
*மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்*
*உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி*
*சனி பாம்பிரண்டும் உடனே*
*ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல*
*அடியாரவர்க்கு மிகவே*

*என்று பாடுகின்றார்.*

நாளும் பொழுதும் ஈசனையே நினைந்து அவனைச் சரணடைந்து வாழ்வோமாயின் எங்களுக்குள் பிரவகிக்கும் ஈசனுடைய இறை சக்தி கிரகங்களின் ஈர்ப்பு சக்தியைவிடப் பலம் வாயந்த எதிர்ப்பு சக்தியாக உருவாகி எமதின்னல்களை நாமே தாங்கக் கூடியளவுக்கு மனோ பலத்தைக் கொடுக்கும் என்பதுதான் உண்மையாகும்.

எந்தவொரு அருளாளரும் கிரகங்களை வழிபடும் படியோ அல்லது எள்ளெரிக்கும்படியோ கூறவில்லை.

நாளுங் கோளும் இறைவனுக்குக் கட்டுப்பட்ட வையே என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் கூறுகின்றார்.

நாளென் செயும் வினைதான் என்செயும் என்னைநாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

இங்கு நாளென் செயும் என்றுதான் கேட்கிறார்.

இவற்றையெல்லாம் ஆண்டவன் சந்நிதியல் இசையொடு ஒப்புவிக்கின்ற நாம் இவற்றின் கருத்துக்கள் வழி நில்லாது எவ்வளவு முட்டள்களாக சிந்தனையற்ற சுயலம் நிசைந்த ஒரு கூட்டத்தின் வாய்வார்த்தைகளை நம்பி மோசம் போய்க் கொண்டிருக்கின்றோமே.

புலம் பெயர்ந்த நாடுகளில் இட நெருக்கடியான சில ஆலயங்கள் பணவருவாயை முதன்மையாகக் கொண்டு நவக்கிரங்களை அமைத்து பக்தர்களை படுத்துகின்ற துயரத்துக்கு அளவேயில்லை.

இறுதியாக சிறு தெய்வ வழிபாடுகளிலிருந்து விலகி எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளை வணங்கி உய்வுறுவோமாக. ●

# அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

நற்பொருள் பெறுதல் வேண்டின் நலமெலாம் பெருக வேண்டின்

அற்புத மூர்த்தியாம் கற்பக கணபதியின் பொற்பதம் பணிந்திட வாரீர்

## 12ம் ஆண்டு வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

06.09.2013 முதல் 18.09.2013

இடர் களைந்து இன்னருள் புரியும் ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமான் ஆலயத்தில் நிகழும் மங்களகரமான விஜய வருட மகோற்சவம் மேற்கண்ட திகதியில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது

## வழிபாட்டு நிகழ்ச்சி நிரல்

**05.09.2013 வியாழன் மாலை 5.00 மணி**

விநாயகர் வழிபாடு, அனுக்ஜை, கணபதி ஹோமம், கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்து சாந்தி, பூமி பூசை, அங்குரார்ப்பணம்

**06.09.2013 வெள்ளி கொடியேற்றம்**

காலை 7.00 மணி : அபிசேகம் ஆரம்பம் காலை 8.00 மணி காலைப் பூசை

காலை 9.00 மணி : பேரீதாடனம்

காலை 9.30 மணி : வசந்த மண்டப பூசை, கொடியேற்றக் கிரியைகள், பகல் 11.00 மணி : கொடியேற்றம்

**06.09.2013 வெள்ளி முதல் 14.09.2013 சனி வரை**

காலை 8.30 மணி : பூசை காலை 9.00 மணி அபிசேகம்

காலை 11.00 தம்ப பூசை காலை 11.30 மணி வசந்தமண்டப பூசை

மாலை 5.30 மணி மாலைப்பூசை மாலை 6.30 மணி தம்ப பூசை

இரவு 700 மணி: வசந்தமண்டப பூசை இரவு 8.30 மணி திருவீதியுலா

**15.09.2013 ஞாயிற்றுக்கிழமை – தேர்த்திருவிழா**

காலை 6.30 மணி அபிசேகம் காலை 7.30 மணி காலைப் பூசை காலை 8.00 மணி தம்ப பூசை

காலை 8.30 மணி வசந்த மண்டப பூசை காலை 10.00 மணி சுவாமி தேரில் எழுந்தருளல்

பிற்பகல் 1.00 மணி : பச்சை சாத்துதல் பிற்பகல் 1.30 மணி பிராயச்சித்த அபிசேகம்



**16.09.2013 திங்கட்கிழமை – தீர்த்தோற்சவம்**

காலை 7.00மணி அபிசேம் காலை 9.00மணி பேரீதாடனம் காலை 10.00 மணி வசந்தமண்டப பூசை

காலை 11.00 மணி தீர்த்தோற்சவம் மாலை 6.00 மணி : வசந்தமண்டப பூசை

இரவு 8.00 மணி : கொடியிறக்கம்



**17.09.2013 செவ்வாய்க்கிழமை – சங்காபிசேகம், பூங்காவனம்**

காலை 10.00 மணி 108 சங்காபிசேகம் இரவு 7.00 மணி திருக்கல்யாணம்

**18.09.2013 புதன் கிழமை – வைரவர் மடை**

மாலை 7.00 மணி வைரவர் மடை

## தினசரி உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| 06.09.2013 | வெள்ளி | கொடியேற்றம் | மூஷிக வாகனக் காட்சி |
| 07.09.2013 | சனி | 2ம் திருவிழா | தூர்வா (அறுகு) கணபதி உற்சவம் |
| 08.09.2013 | ஞாயிறு | 3ம் திருவிழா | சக்தி கணபதி உற்சவம் |
| 09.09.2013 | திங்கள் | 4ம் திருவிழா | புஷ்ப கணபதி உற்சவம் |
| 10.09.2013 | செவ்வாய் | 5ம் திருவிழா | வேதபாராயணத் திருவிழா<br>பக்தி முக்திபாவனோற்சவம்<br>திருமுறை பாராயணம் |
| 11.09.2013 | புதன் | 6ம் திருவிழா | வசந்த உற்சவம் (இசை நிகழ்ச்சி) |
| 12.09.2013 | வியாழன் | 7ம் திருவிழா | மாம்பழத் திருவிழா |
| 13.09.2013 | வெள்ளி | 8ம் திருவிழா | வேட்டைத் திருவிழா |
| 14.09.2013 | சனி | 9ம் திருவிழா | சப்பறத் திருவிழா |
| 15.09.2013 | ஞாயிறு | 10ம் திருவிழா | தேர்த்திருவிழா |
| 16.09.2013 | திங்கள் | 11ம் திருவிழா | தீர்த்தம் |
| 17.09.2013 | செவ்வாய் | 12ம் திருவிழா | பூங்காவனம் திருக்கல்யாணம் |
| 18.09.2013 | புதன் | 13ம் திருவிழா | வைரவர் மடை |

9/2013

உ

கற்பகபதி

# ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் - வோல்தம்ஸ்ரோ

# SRI KARPAGA VINAYAGAR -TEMPLE

அற்புத அருள்புரி கற்பக கணபதி
பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்

## 12th ANNUAL MAHOTSAVAM 2013

## 12வது மகோற்சவ விஞ்ஞாபனம் 2013



| Flag Hoisting | Chariot Festival | Holy Water Ceremony *(Sacred Bathing)* | Holy Wedding |
|---|---|---|---|
| 06.09.2013 11.00 am | 15.09.2013 11.00 am | 16.09.2013 11.00 am | 17.09.2013 7.00 pm |

2-4 Bedford Road, Walthamstow E17 4PX, Tel: 020 8527 3819 Reg. Charity No: 1092252